# இறையியல் கோலங்கள்

வடிவம் 26 தை – ஆனி 2011 வண்ணம் 1,2

## இயற்கை மனிதனுக்கு இறைவனின் கொடை
## இயேசுவின் போதனையில் இயற்கை
## இயற்கையில் இறைவனை அறிதல்
## இயற்கைச் சமநிலையும் இறையியலும்
## இறைவன் தந்த படைப்பைப் பாதுகாக்க...
## முகவரி இழந்து தவிக்கும் நிலங்கள்
## மானிட சுயநலத்தால் சிதைகின்ற கடவுளன்பு
## இதழின் இறையியலாளர்

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


| | | |
|---|---|---|
| Vol | : | 26 |
| No. | : | 1,2 |
| January - June | : | 2011 |

| | | |
|---|---|---|
| வடிவம் | : | 26 |
| வண்ணம் | : | 1,2 |
| தை - ஆனி | : | 2011 |

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,

இலங்கை.

ஆசிரியர்: அருட்தந்தை மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்

துணை ஆசிரியர்கள்: அருட்தந்தை அ.யோ.ஜெயசீலன்
அருட்தந்தை செல்வரட்ணம்

நிர்வாகக்குழு: அருட்சகோ. ப.பத்திநாதர்
அருட்சகோ. ச.விமலசேகரன்
அருட்சகோ. ஆ. ஸ்கரன்ராஜ்
அருட்சகோ. இ. அன்ரனி சோசை
அருட்சகோ. ம.சதாஸ்கர்
அருட்சகோ.பி.ஜோண் றெக்ஷன்

வெளியீடு: தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Editor: Rev.Fr.M.A.P.R. Savundranayagam

Sub Editors: Rev. Fr. A.J. Jeyaseelan
Rev. Fr. T.Selvaratnam

Administrative Board: Rev. Bro. P. Pathinathar
Rev. Bro. S. Vimalasekaran
Rev. Bro. A. Skaranraj
Rev. Bro. I. Antony Sosai
Rev. Bro.M.Sathaskar
Rev. Bro.P.John Rexon

Publication: St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel. No.: 021 222 2482, 021 222 7145

# உள்ளே


- ஆசிரியர் உரை
- இயற்கை மனிதனுக்கு இறைவனின் கொடை
  அருட்திரு. ஜெராட் டி ரொசய்ரோ அமதி
- இயேசுவின் போதனையில் இயற்கை
  திரு. எஸ் ஏ. ஆரோக்கியநாதர்
- இயற்கையில் இறைவனை அறிதல்
  அருட்சகோ. சி.பற்றிக் லியோ அ.ம.தி
- இயற்கைச் சமநிலையும் இறையியலும்
  திரு. ஆர். திலகறட்ணம்
- இறைவன் தந்த படைப்பைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்
  அருட்சகோ. ஆ. ஸ்கரன்றாஜ்
- முகவரி இழந்து தவிக்கும் நிலங்கள்
  அருட்சகோ. யே. ஜெறால்ட் அ.ம.தி
- மானிட சுயநலத்தால் சிதைகின்ற கடவுளன்பு
  அருட் சகோ. அன்ரன் ஜஸ்ரின் அ.ம.தி
- புனித பிரான்சிஸ் அசிசியார் – இதழின் இறையியலாளர்
  அருட்சகோ. ம. அன்ரன் ஜெராட்
- SYNOPSIS

# ஆசிரியர் உரை

இறைவன் மனிதனைப் படைத்து அமைதியும் இன்பமும் நிறைந்த ஏதேன் தோட்டத்தில் நம் ஆதிப் பெற்றோர்களை வைத்தார். "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்க செய்தார்" (தொ.நூல் 2:15). பலுகிப் பெருகி பூமியை நிரப்பி மனித ஆற்றலுக்கு அதை உட்படுத்தும் பொறுப்பை இறைவன்தாமே மனிதனிடம் ஒப்படைத்தார். வேறு விதமாக சொல்லுவதென்றால், இயற்கையானது மனிதனுக்கு இறைவன் தந்த கொடை. இந்த இயற்கையின் மூலம், சிறப்பான விதத்தில் இறைவனை நாம் அறிந்து கொள்ள முடியும். இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்பட்டு ஆயிரக்கணக்கில் மனிதர்கள் அழிந்து பெரும் பொருட் சேதத்தையும் அனுபவிக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்றாக இயற்கை சமநிலை குழப்பப்பட்டிருப்பது விஞ்ஞானிகளால் சுட்டிக் காட்டப் பட்டுள் ளது. இறைவனின் உன்னத படைப்பாகிய மனிதர்களாகிய நாம் சற்று தரித்து இயற்கை மட்டிலே நமக்குள்ள கடமைகளையும் பொறுப்புக் களையும் மீண்டும் சீர்தூக்கிப் பார்ப்பது இன்றைய சூழ்நிலையில் மிகவும் அசியமாக உள்ளது. இந்த தேவையை ஓரளவேனும் நிறைவேற்றுவதில் எம்மாலான சிறு முயற்சியாக இந்த இதழ் அமையும் என்று நம்புகின்றோம்.

Fr. M.A.P.R. Savundranayagam



# இயற்கை மனிதனுக்கு இறைவனின் கொடை

## பழைய ஏற்பாட்டுப் பார்வை

அருள்திரு. ஜெராட் டி ரொசய்ரோ அமதி

## அறிமுகம்

நான், என் குடும்பம், என் குலம் என்ற சிந்தனை வட்டத்துள் முடங்கி விட்ட மனிதரை நிமிர்ந்து பரந்து விரிந்த வானத்தை, எல்லை தெரியாத கடலை, வளம்மிக்க நிலத்தை, சுதந்திரமாகத் தொட்டுச் செல்லும் காற்றை, சலசலத்தோடும் நிரோடைகளை, நதிகளை, நீர்த் தேக்கங்களை திருவிவிலிய பழைய ஏற்பாட்டுக் கண்ணோக்கில் உற்றுப்பார்க்க இக்கட்டுரை ஓர் தூண்டலாகும். அப்பார்வை வழியாக இயற்கை உணர்த்துவதை உய்த்துணர இது ஓர் அழைப்பாகும். போரின் பின்புல வாழ்வியலில் இயற்கையின் கொடைகளை அறியவும், இறைவனின் நிபந்தனையற்ற கொடையை எங்கனம் வாழ்வது என விழிப்புப் பெறவும் இது ஒரு சவாலாகும்.

## படைப்புக் கதையில் இயற்கை

மண்ணோடு ஒன்றி, சூழமைவில் குடிகொண்டு, வான், வன, நில, நீர் வளங்களைப் பயன்படுத்தி வாழும் சுயநிர்ணய வாழ்வியலே இறைவனின் திட்டம் என்பது படைப்புக் கதையில் இயற்கை உணர்த்தும் உண்மையாகும். ஆழமான அன்புறவில் இறைவன் அனைத்தையும் படைக்கிறார் (தொ.நூ. 1:22, யோபு:39:1-2). ஒளி, காற்று, கடல், நிலம் இவற்றைக் கடவுள் முதலில் படைக்கிறார். பின்னர் தாவரங்கள், விலங்குகள், பறப்பன, ஊர்வன என உயிரியல் படைப்பு இடம் பெறுகின்றது. பின்னையவை வளர்வதற்கும், வாழ்வதற்கும் முன்னையவை அடிப்படைத் தேவைகளாகும்.

மனிதரைப் படைக்கும் முன்னர் கடவுள் படைத்தவற்றை நல்லதெனக் கண்டார். ஆக படைப்பு அனைத்தும் மனித தொடர்பு இன்றியே உள்ளக மதிப்பைப் பெறுகின்றன. நன்மைத் தனத்துக்கு ஊற்றாகிய கடவுளின் நன்மைத்தனம் படைக்கப்பட்ட அனைத்திலும் உள்ளகப் பொருளாய் உள்ளது (திபா. 8:3, 19:1).

படைப்பு இறைவனால் விரும்பி உண்டாக்கப்பட்ட ஒழுங்கைத் தன் இயல்புப் பண்பாகக் கொண்டுள்ளது. படைப்பில் வெளிப்படும் குழப்பத்தையும், வெறுமையையும்

நெறிப்படுத்தி, அதன் இயல்பு நிலையை இறைவனே உள்ளுறைந்து தமது ஆவியால் நிரப்பி நிர்ணயிக்கின்றார், நிலைநாட்டுகின்றார் (தொநூ. 1:2). படைப்பில் இறைவனின் உள்ளுறைவும், தொடர்ச்சியான ஆக்கச் செயலும் படைப்பு அனைத்தையும் புனிதத் தன்மையால் நிரப்பியுள்ளது.

## ஞானநூல்களில் இயற்கை

ஞான நூல்களில் இறை ஞானத்தின் வெளிப்பாடான படைப்பின் எழில்மிகு வனப்பும், நன்மைத்தன்மையும் சுட்டப்படுகின்றது. சங்கத்திருவுரை, பழமொழி, என்பன இறைவன் 'ஞானத்துடன்' 'ஞானத்தை' வைத்து தமது படைப்புச் செயலைச் செய்தார் என எடுத்துரைக்கின்றன (யோபு. 38: 4..., 25-27, ப.மொ. 3:9, 8:22, ஞான. 9:11). படைப்பில் கடவுளின் மாட்சியும், படைப்பாற்றலும் வெளிப்படுவதையும், இறையின் உள்ளுறைவால் அனைத்தும் தத்தம் வரம்புக்குள் நிற்க, அவை இறைவனால் நெறிப்படுத்தப்படுவதாகவும், பராமரிக்கப்படுவதாகவும் தி.பா. 104 லும் சா.ஞா. 13:1-9 லும் காண்கிறோம். இறைவனின் தொடர் திருவெளிப்பாட்டு ஆற்றல் படைப்பில் நிரந்தரமாக காணப்படுகின்றது தி.பா. 19:1-4, ஞா.நூ. 13:1-9).இயற்கை அனைத்தும் இறைவனுக்கே சொந்தம் (தி.பா. 24:1, 33:6, 50:10-11, 89:12, 95:4-9, 145:15-16, 147:4-9). தி.பா. 136 இறைவனின் மீட்பளிக்கும் படைப்பாற்றலை வெளிக்கொணர்கிறது. கடவுளின் அன்புப் பகிர்வின் ஓர் உன்னத வெளிப்பாடாக படைப்புள்ளது. "இறைவனின் பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது" (தி.பா.33:5). இயற்கை செயல்படும் விதத்தை இறைவன் நுணுக்கமாய் அறிந்திருக்கின்றார். ஆக, படைப்பனைத்தும் இறைவனின் திட்டப்படி இயைந்து, இசைந்து ஒருமைப்பாட்டுடன் செயல்படுகின்றன. இயற்கையில் ஒவ்வொன்றும் மற்றவற்றிற்காக வாழ்கின்றது. இதன் மூலம்தான் உலகில் முழுமையான வாழ்வு நிலைத்திருக்கின்றது.

சுருக்கமாக, இயற்கைச் சூழமைவு உயிர்த்துடிப்புள்ளதாகவும், இயக்காற்றல் உடையதாகவும் இருப்பதால் அது அடிப்படையில் உயிர் வாழ்வைத் தன்னகமாய்க் கொண்டுள்ளது. இயற்கையில் பொதிந்துகிடக்கும் இறையருள், ஞானம், உள்ளுறவு, இணக்க உறவு இவற்றின் விளைவாக இயற்கை அன்பு செய்யப்பட, இயற்கையின் விதிமுறைகள் மதிக்கப்பட, இயற்கையிலிருந்து கற்றுக் கொள்ள அழைப்பு விடுகின்றது (ஞான.1:7, 7:15-22, 30:24-28, ச.தி.3:1-9, 8:6, 10:20, 11:3-7, யோபு.12:7-10, ப.மொ.6:6-8, 8:22-28).

## இறைவாக்கினரில் இயற்கை

இஸ்ராயேலின் மீட்பரே படைப்பனைத்தினதும் கடவுள் என்பது இறைவாக்கினரின் அடிப்படைக் கூற்றாகும். அவர்களின் சிந்தனையில் நிலம் முக்கியம் பெறுகின்றது.

இஸ்ராயேலர் தம் சுயமுயற்சியால் நிலத்தைப் பெறவில்லை. அது அவர்களுக்கு இறைவன் அளித்த கொடையாகும் (வி.ப. 3: 1-12…, எசே. 37: 13-14). நிலத்தைக் கொடுத்து இறைவன் அவர்களை ஓர் தனித்துவமான இனமாக, தன் தேர்வின் மக்களாக்கினார். ஆக, தம்மை ஓர் இனமாக்கிய நிலம் இறைவனுக்குச் சொந்தமானது என்பது அவர்களது நம்பிக்கையாகும் (வி.ப. 9:29, லேவி. 25:23-24). எனவே அந்நிலம் அந்நியர் உடமையாகக்கூடாது. ஒரு சந்தைப் பொருளாக விற்கப்படக்கூடாது. நிலத்துக்கு ஓய்வு கொடுக்கப்பட வேண்டும். நிலம் சமமாகப் பங்கிடப்பட்டு, குழுமச் சொத்தாக பாவிக்கப்பட வேண்டும். நிலத்தின் புனிதத் தன்மை பேணப்பட வேண்டும் (வி.ப. 23:10-12, லேவி. 25:11-13). காடுகள் அழிக்கப்படாமல் பேணிக்காக்கப்பட வேண்டும். நிலம், நீர், காற்று இம்மூன்றும் அனைத்து உயிரினங்களின் அடிப்படைத் தேவையாகும். இவையும் இன்னபலவும் பின்பற்றப்பட வேண்டிய அறமாக வலியுறுத்தப்படுகின்றது (லேவி. 25: 1-5, 26: 23, இ.ச. 20:19, எசே. 47:13–48:29).

“நிலம் அழுது புலம்புகின்றது, வாடிவதங்குகின்றது, குடிகளால் தீட்டுப்பட்டு நாறுகிறது…” என்ற இறைவாக்கினர் எசாயாவின் புலம்பல் அறம் பிழைத்த வாழ்வையும் அதன் விளைவையும் கோடிட்டுக்காட்டுகின்றது (எசா. 24:4-6). சுற்றுச் சூழலை மதித்து பேணிப் பாதுகாக்கும் அறவாழ்வுப் புறழ்வால் மனித சமூகமும், ஏனைய உயிரினங்களும் அழியும் என எச்சரிக்கின்றனர் இறைவாக்கினர்கள் (ஓசே. 4:1-3, எரே. 9:4-11). ஆயினும் எசாயாவின் நிறைவியல் காட்சி (11:7-9) உண்மையான ஒருமைப்பாட்டு வாழ்வு கைகூடிட மானிட-மானிட, மானிட-இயற்கை, இடையே உறவு சீராக்கப்பட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

## மானிட–இயற்கை உறவு

யோபு ஆகமத்தின் இறுதி இயல்கள் (38-41) இயற்கை-இறை உறவை வலியுறுத்துகின்றன. இயற்கையைக் காத்து வழிநடத்துபவர் இறைவனே. ஆக படைப்பனைத்தும் மனிதர்களுக்காக அல்ல என்பது சுட்டப்படுகின்றது (யோபு. 34:5…). இறைவனின் படைப்பு மனித மையங் கொண்டது அல்ல என்பதும், படைப்பு அனைத்துமே மனிதருக்குப் பயனளிக்க வேண்டும் என்பதற்காக அல்ல என்பதும் இவ்வியல்களில் உணர்த்தப்படுகின்றது. இறை படைப்பில், மெய்ப்பொருள், பருப்பொருள் சார்ந்த அனைத்தும் அவருடைய ஆளுகைக்கு கட்டுப்பட்டவையே ஆகும். மானிடர் உயிரின உலகின் ஓர் அங்கமாயிருக்கிறார்கள். ஏனைய அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ உரிமை கொண்டுள்ளன (தொ.நூ. 2:19-20). ஆக, மானிட தனித்துவம் (தொ.நூ. 1:27) படைப்பாற்றல் மதிக்கப்பட வேண்டிய அதேவேளை, மானிட பொறுப்பும் மானிடர் இயற்கையோடு கொள்ள வேண்டிய உறவின் பாங்கும் பேணப்படுவது அடிப்படையும் அவசியமானதுமாகும்.

"அனைத்தையும் ஆண்டு கொள்ளுங்கள்" (தொ.நூ. 1:28) என்ற இறை பணிப்பு, இறைவனின் கொடையான இயற்கையை நம்பகத் தன்மையுடன் பொறுப்புள்ள இறை பிரதிநிதியாக இருந்து வழிநடத்த, பாதுகாக்க மானிடருக்கு அளிக்கப்பட்டதாகும். இப்பணிப்பை தோழமை உணர்வுடன் ஆற்றுவது மானிடரின் தலையாய கடமையும் கடப்பாடுமாகும். இங்கு பகலையும் இரவையும் 'ஆள' கடவுள் படைத்த இரு ஒளிப்பிளம்புகளும் (தொ.நூ. 1:16) செயல்படும் பாங்கு மானிடரின் இயற்கையை 'ஆளும்' பாங்கைப் புரிந்து கொள்ள அழைக்கின்றன. இயற்கை உணர்த்தும் நிறை வாழ்வை மானிடர், மானிட-மானிட, மானிட-இயற்கை இசைவிலும் இணக்கத்திலும் அடைய முயல வேண்டும். இயற்கையின் பல்வளங்களையும் பயன்படுத்துவதிலும், அவற்றை நுகர்வதிலும் பயன்-மைய உறவிலிருந்து விடுபட்டு, இயற்கை உணர்த்தும் ஏங்கி நிற்கும் முழுமையான வாழ்வை அடைவதற்கு மானிடர் துணை போகவேண்டும். "தோட்டத்திலுள்ள எந்த மரத்திலும் உன் விருப்புப் போல உண்ணலாம். ஆனால்…" (தொ.நூ. 2:16) என்ற இறைவனின் அறிவுரை இதையே உணர்த்துகின்றது. மானிட பொறுப்புள்ள பிரதிநிதித்துவப்படுத்தல் அமைய வேண்டிய பாங்கை தி.பா. 72:4-6, எசே.34 எடுத்துக்காட்டுகின்றன.

## நிறைவாக

போரின் பின்புல வாழ்வியல் இயல்பு நிலையை நோக்கி நொண்டி அடிக்கின்றது. ஆக்கிரமிக்கப்பட்டு விலை போகும் கடல் வளம், சுரண்டப்படும் நிலவளம், நீர்வளம். இயல்பான இருப்பிடங்களைத் தேடும் உயிரினங்கள், இன்னும் பலவற்றால் சீலை உரியப்பட்ட நிலையில் இயற்கைத் தாய் நிறைவை நோக்கி பிரசவ வேதனையுற்றுள்ளாள் (உரோ.8:18…). இன்னிலையில் மானிடர் மண்ணோடு ஒன்றி, இயற்கையுடன் அன்புறவு கொண்டிடுவதும் சுற்றுச் சூழல் அறநெறியை வாழ்வதும் கடமையும், காலத்தின் கட்டாயமுமாகும். சுற்றுச் சூழல் அறநெறி என்பது, இயற்கையின் தாங்கக் கூடிய சக்தியை மதிப்பது, இயற்கையின் பல்வளங்களைப் பாதுகாப்பது, பயன்படுத்துவதில் சிக்கனமாயிருப்பது, நேர்மையான, நடுநிலையான பங்கீடு செய்வது, இருப்பதில் நிறைவு மனம் கொள்வது, மனித அறிவு, அறிவியல் தொழில் நுட்பங்களின் வரையறையை ஏற்பது, மக்கள் சூழமைவுக்கு தகுந்த தன்னிறைவுப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பது என்பனவாகும்.

இயற்கையின் உரிமைகள் மனித அடிப்படை உரிமைகளோடு தொடர்புடையவையாகும். நம் ஒவ்வொரு செயலும் நம் எதிர் காலத்தவர் வாழ்வையும் நிர்ணயிக்கும். ஆக, சுற்றுச் சூழல் அறநெறியானது எதிர்கால சந்ததியினரை உள்ளடக்கிய நேர்மை, நீதி, வாழ்வு, அதனால் அமைதி, மகிழ்ச்சியை தழுவி அமைந்ததாகும். அர்த்தமுள்ள செயல்பாட்டுக்கு அடித்தளம் சுற்றுச் சூழல் அறநெறி வாழ்வாகும். இதுவே பழைய ஏற்பாட்டு ஒளியில் நாம் காணும் இயற்கை உணர்த்தும் பாடமாகும். இந்த அறநெறி வாழ்வுச் செயல்பாடு கிறிஸ்தவர்களுக்கு ஓர் விருப்புத் தேர்வு அல்ல, மாறாக, ஒரு அறநெறி அவசியமாகும். இயற்கையோடு ஒன்றிய முழுமனிதநலமே இறைவனின் திட்டமாகும்.



# இயேசுவின் போதனையில் இயற்கை

திரு. எஸ் ஏ. ஆரோக்கியநாதர்

## முன்னுரை

இயற்கை இறைவன் தந்த கொடை: இந்த இயற்கையைக் கட்டுப்படுத்தவும் இதன்மேல் ஆட்சிசெலுத்தவும் அதுதரும் பலன்களை அனுபவிக்கவும் அதனைப் பாதுகாத்து விருத்தி செய்யவும் உரிமைபெற்றவன் மனிதன் (தொ.நூ. 1:15) இதே ஆளுமையையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி இன்றைய விஞ்ஞான மனிதன் உலகை அழிவின் விழிம்புக்கு இட்டுச்செல்வதை நாம் கண்டும், கேட்டும், அனுபவித்துக்கொண்டும் வருகின்றோம். இயற்கையை எழில்கொஞ்சும் விதத்தில் படைத்த இறைவன் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. (தொ. நூ 1:31). இவ்வாறு அழகாகவும் நன்றாகவும் படைக்கப்பட்ட உலகமும் அதில் அடங்கியுள்ள இயற்கை வனப்புகளும் இன்று அழகிழந்து பொலிவிழந்து அல்லோலகல்லோலப்பட்டு இருப்பதற்கு மனிதனே பொறுப்பேற்க வேண்டியவனாவான்.

இயற்கையில் காணப்படும் புல், பூண்டுகள், மரஞ்செடி கொடிகள், பூக்கள், பழங்கள் முதற்கொண்டு நிலம், நீர், கடல், மலைகள் போன்றவைகளும் இயற்கை நமக்கு அள்ளித்தந்த பெருங்கொடைகளே. எனவே தான், படைப்பெல்லாம் படைப்பாளரைப் பிரதிபலிக்கும் பளிங்கு என்றார் ஒருவர். ஆனால், இன்று இயற்கையால் ஏற்படும் அழிவுகள் பலரையும் பயத்துக்கும் கவலைக்கும் உள்ளாக்கி வருகின்றன. காரணம்? இயற்கையின் மேல் எதிர்காலத்தின்மேல் அக்கறையில்லாமல் இயற்கை வளங்களைத் தேவைக்கு மேல் அதிகமாகப் பயன்படுத்துவதும், இயற்கையின் இயல்புநிலையை பாழ்படுத்தும் பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பெருக்குவதுமே. இதனால், பூமியின் வெப்பம் அதிகரித்திருக்கிறது. பூமி மெல்லமெல்லச் சுருங்கிக் கொண்டே வருகின்றது. இனங்காணமுடியாத புதிய நோய்களும் உருவாகி உலாவருகின்றன.

மனித குல அழிவு, மனிதனால் தான் என்பதற்கு மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. இப்படிப்பட்ட மனிதகுல மற்றும் இயற்கை சார்ந்த அழிவுகளைத் தடுக்கவேண்டியதும் இயற்கையை பாதுகாக்கவேண்டியதும் அனைவரின் கடமையாகும். மனித குலம் சார்ந்த கடமையுடன், கிறிஸ்தவன் என்ற முறையில் கிறிஸ்தவ கடமைகளும் உண்டு. இறையரசை இவ்வுலகில் நிறுவவந்த இயேசு அதன் அடிப்படை உண்மைகளை அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் இயற்கையோடு இணைந்து தெளிவுபடுத்தியதை நற்செய்திகள் சான்று பகர்கின்றன.

## மலைப்பகுதியே இயேசுவின் மையத்தளம்

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்கிறது இந்துத் தத்துவம். இந்துக்களுக்கு "மலைகள்" இறைவன் வாழும் திருத்தலங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. மலைகளில் இறைவனைத்தேடும் பாரம்பரியம் விவிலியத்தில் மிகச்சிறப்பாக இடம் பெற்றுள்ளது. "ஆண்டவரே உம் கூடாரத்தில் தங்கிடத்தகுதியுள்ளவர் யார்? உம்திருமலையில் குடியிருப்பவர் யார்?"(தி.பா.15:1). இஸ்ராயேல் மக்களது வரலாற்றில் ஏற்பட்ட மிகவும் சிறப்பான ஒரு நிகழ்ச்சி சீனாய் மலையில் யாவே கடவுள் இஸ்ராயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கைதான். "ஆண்டவர் சீனாய் மலைமேல் மலையுச்சியில் இறங்கி வந்தார். அப்போது ஆண்டவர் மோசேயை மலையுச்சிக்கு அழைக்க, மோசே மேலே ஏறிச் சென்றார்" (வி.ப.19:20; தி.பா 68:15-16). மலைகளின் கெம்பீரம், அவற்றின் உயரம், அவை கொண்டுள்ள நீடிய ஆயுள் போன்ற தன்மைகள் கடவுளின் மகத்துவத்துக்கும் பெருமைக்கும் ஈடுகொடுப்பதாக மக்கள் கருதினர்.

இவ்வாறு, ஒரேபு மலை மேல் இஸ்ராயேல் மக்களுக்கு எகிப்து நாட்டிலிருந்து விடுதலை பெற்றுத்தர மோசேக்கு அழைப்புவிடுத்த இடமாகவும், கார்மேல் மலை, விவிலியம் கூறும் உண்மைத்தெய்வம் யாவே மட்டுமே என்பதை இறைவாக்கினர் எலியா வழியாக எண்பித்துக்காட்டிய இடமாகவும் விளங்கியது.மலைகளிலிருந்து இறைபிரசன்னம் தோன்றியதும், திருச்சட்டம் வெளியானதும், உண்மைத்தெய்வம், யாவே கடவுளா? பாகால் தெய்வமா? என்ற போராட்டப் பிரச்சினைக்கு முடிவுகட்டி போலி இறைவாக்கினர்களின் முகத்திரையைக் கிழித்து எறிந்த இடமாகவும் பழைய ஏற்பாட்டில் மலைகள் முக்கிய இடத்தை வகித்தன.


## இயேசுவின் அருட்பொழிவும் இயற்கைச் சூழமைவில் இருந்து விழுந்த முத்துக்களே

இஸ்ராயேல் மக்களுக்குத் திருச்சட்டங்கள் மோசே வழியாக சீனாயில் இருந்து வெளிப்பட்டது போல, புதிய ஏற்பாட்டுமக்களுக்கு, புதிய மோசேயான இயேசுவால் மலையில் இருந்து புதிய நடைமுறை ஒழுங்குகள் பொழியப்படுகின்றன. இயற்கைச் சூழமைவு கொண்ட மலையைத் தமது அருட்பொழிவுக்குத் தேர்ந்தெடுத்த காரணம், மக்கள் திறந்த மனதுடன் இறைவார்த்தையைக் கேட்க வேண்டுமென்பதற்காகவும், இயற்கை தரும் காற்று, மரநிழல்கள், சுற்றுச் சூழல் மக்களை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்குமாகவே புதிய மோசே இயேசு ஒரு புதிய உடன்படிக்கையை ஒரு புதிய மலையிலிருந்து, ஒரு புதிய மக்களை உருவாக்கும் நோக்குடன் தருவதாக மத்தேயு மலைப்பொழிவை அமைத்துள்ளார்.

இதே போல, இயேசுவின் உருமாற்றம் தாபோர் மலையில் நிகழ்ந்ததென்பது பாரம்பரியக் கூற்று. தனது பாடுகளைப்பற்றி முன்னறிவித்த இயேசு, சீடர்களின் சோகத்தையும் ஏமாற்றத்தையும் மனதில் கொண்டு, அவர்களை உற்சாகப்படுத்த, தனது வெற்றி நிலையை அவர்களுக்குக் காட்சியாகத் தருகிறார் (மத்.17:1-13; மாற். 9:2-8; லூக். 9:28-36). தாபோர் மலையும் அங்கே ஏற்பட்ட இயேசுவின் வெற்றி நிலையும், துன்புறும் மக்களுக்கு உற்சாகத் தைத் தருகின்றன. இயற்கை தரும் தனிமையில் இயேசுவின் வெளிப்பாடு இது.

இயேசுவின் உச்சக்கட்ட வெளிப்பாடும், போதனையும் ஒரு திறந்த வெளியரங்கில், மலையில் (கல்வாரி) அரங்கேறுகின்றது. இயேசு கொண்டுவந்த மீட்பு அனைத்துலக மக்களுக்கும் உரித்தானது என்று "கொல்கொதா" என அழைக்கப்படும் "கல்வாரி மலை" சொல்லித்தரும் பாடம் நம்மை வியக்கவைக்கிறது "கொல்கொதா" என்றால், "மண்டை ஓடு" என்று பொருள் (மத்27:33), அதாவது, என்றோ ஒரு நாள் இறந்த ஆதாம், இங்குதான் புதைக்கப்பட்டார் என்றும், அவரது மண்டை ஓடும் அங்கேதான் இருந்தது என்றும், ஒரு பாரம்பரியம் யூத மக்களிடையே இருந்தது. அதே இடத்தில் இயேசு சிலுவையில் தொங்கியபோது, அவரது இரத்தம் கீழே சிந்தி, ஆதாமின் மண்டை ஓட்டையும் நனைத்து, ஆதாம் வரைக்கும் மக்கள் மீட்பு பெறத் துணைபுரிந்தது என்பதுவே இப்பாரம்பரியததின் மையப்பொருள். ஆக, ஆதாம் முதல் அனைத்து மக்களும், இயேசுவின் சிலுவை மரணத்தால் மீட்புப்பெறுகின்றனர் என்ற மாபெரும் உண்மைக்கு, இந்தக் கல்வாரி மலை சாட்சியம் பகர்கிறது. இவ்வாறு, இயேசுவின் பகிரங்க வாழ்வின் தொடக்கமுதல், இறுதி வரை, அவரது சாதனைகள், இயற்கையோடி ணைந்த மலைகளில் வெளிப்பட்டதைக் காண்கிறோம்.

## இறையரசின் வெளிப்பாடு இயற்கையோடு இணைந்தது



இறையரசின் விழுமியங்களை எடுத்துரைக்க, இயேசு இயற்கைச் சூழ லைப் பயன்படுத்துவதைப் பல சந்தர்ப் பங்களில் காண்கிறோம். நாம் அன்றா டம் காணும் பறவைகள், காட்டு மலர் செடிகள், குடும்பங்களில் வழங்கப்படும் உணவு வகைகள், வயலில் காணப் படும் விதைகள், முட்செடிகள், தானியங் கள், களைகள், பழங்கள் போன்றவற்றி னூடாக இறையரசின் விழுமியங்களை எமது கண்முன்னே நிறுத்தி வைத்து, அதனூடாக எம்மை வழிநடாத்திச் செல்லும் அற்புத உண்மைகளை நாம் கண்டறியலாம். பாலை நிலம், அமைதியான மலைப்பகுதி போன்றவையே இயேசு தெரிந்தெடுத்த இடங்களாகும். "இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு, மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரருகே வந்தனர்" (மத்.5:1). அதே போன்று, மலைப்பகுதியை இயேசு தனியாகச் செபிக்க பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். "அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட் டார்"(லூக்.6:12). விவிலிய மலைகள் நமக்கு கற்றுத்தரும் பாடம், மலைகள் கடவுள் வாழும் திருத்தலங்கள் என்ற கருத்து, நம்மையும் மலைகளை நாடச் செய்யவேண்டும். இயேசு அடிக்கடி மலைக்குச் சென்று செபித்தார் எனவும் நாம் அறிகிறோம்.(லூக். 6:12).

## இயேசுவின் போதனைகள் இயற்கையை முன்வைத்தே

பாமர மக்கள் இறையரசைப் புரிந்து கொள்ளும் விதத்தில் எடுத்துக் கூறிய உதாரணங்கள் இயற்கையோடு இணைந்தவைகளே. இயேசு பல இடங்களில், தமது மறையுரைகளில், தாவரங்களைப் பயன்படுத்தி,தமது படிப்பினைகளுக்கு வலுச் சேர்க்கிறார். தந்தையின் பராமரிப்புத் தன்மையை வெளிப்படுத்த, காட்டுமலர்ச் செடிகளும், புற்களும், ஆண்டவருக்குப் பயன்படுகின்றன (மத் 6:25-34). செயல்களைக் கொண்டே ஓர் ஆளை நாம் மதிப்பிடவேண்டும் என்பதற்கு, முட்செடிகள், முட்பூண்டுகள், திராட்சைச் செடி, முதலியவற்றை இயேசு பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது (லூக் 6:43 -44 , மத். 7: 15- 20). ஓய்வு நாள் மனிதருக்காகவே என்பதைக் காட்ட, சீடர்கள் கோதுமைக் கதிர்களைக் கொய்து உண்டதை இயேசு குறிப்பிடுகின்றார் (மத்.12:1-8).கோதுமை விதைக்கும் நிகழ்வு வழியாக இறைவார்த்தையைக் கேட்டுப் பயன்பெறுவது எவ்வாறு என்று,இயேசு கூறும் உவமைகள் மூன்று நற்செய்திகளிலும் குறிப்பிடப்படுகின்றன (மத்.13:1-9; மாற். 4:1-9; லூக்.8;4-8). உலகக் கவலை, செல்வ மாய்மையைச் சுட்ட, முட்செடிகள் பயன்படுத்தப்படு கின்றன (மத்.13:22). வயலில் விதைக்கப்பட்ட களைகள், உலகில் உலவிடும் தீமைகள் பற்றிக்குறிக்கின்றன (மத். 13:25 -30). இறையாட்சியின் வளர்ச்சிக்கு கடுகு விதை , கடுகுச் செடி ஒப்புவமையாகக் கூறப்படுகின்றன (மத்.13:31-32). இவ்வாறு, இயேசு , மரம், செடி கொடிகள், களைகள், முட்கள், தானியங்கள் போன்றவற்றைத் தமது உவமைகளிலும், இறையாட்சிப் போதனைகளிலும் பயன்படுத்துவது நாமும் இவற்றைப் பேணி, போற்றி, வளர்த்து, பாதுகாக்க வேண்டும் என்பதை விளக்குகிறது.

## இயற்கையை வைத்தே இறையரசைக் கட்டியெழுப்பினார்.

இயேசு, விண்ணிலிருந்து விழுந்த ஒருபழமுமல்ல, மண்ணிலிருந்து திடீரென முளைத்தெழுந்த துளிருமல்ல. சாதாரண மனித வாழ்வில் இடம்பெறும் நிகழ்வு போல, பெண்ணிடம் பிறந்தவராக( லூக் 1:31), ஒரு குடும்பத்தில் வளர்ந்தவராக (மத்.2:21), ஆலயக்கடமைகளை நிறைவேற்றுபவராக ( லூக் 2:42 ), பெற்றோருக்குப் பணிந்து நடப்பவராக (லூக். 2: 51), அவரது வாழ்வு அமைந்திருந்தது. தனது இறையாட்சிப் பணியைத் தொடங்கும்போதும், சாதாரண ஒரு பாலைநிலம் (லூக். 4:1), பசி மயக்கம் (4:3), உடல், உள சோதனைகள் (4:13),அனைத்தும் இயற்கையோடிணைந்தவையாக இருந்தன.

அவரால் சேர்த்துக் கொள்ளப்பட்ட சீடர்களும், வலை வீசுபவர்களாக (மத். 4:18), படகில் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டு இருந்தவர்களாக(மத.4:21), சுங்கச் சாவடியின் கணக்காளராக (மத்.9:9)இருந்தவர்களே. இறையரசை எடுத்துக்கூற அவர் கையாண்ட உதாரணங்கள், உப்பு, ஒளி, விளக்குத் தண்டு (மத்5:13-15), கண், கைகள், உடல் உறுப்புகள் (மத்.5:13-16, 29) என்பவற்றோடு, இறைபராமாப்பை எடுத்துக்கூற, "வானத்துப் பறவைகள்"(மத்.6:26) "காட்டு மலர்ச் செடிகள்" (மத் 6:28) காட்டுப் புற்கள் (மத்.6:30) என்பவற்றைத் தருகின்றார். இறையரசில் உட்புகுவது கடினம் என்றாலும், முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை என்று உணர்த்த, எருசலேம் ஆலயத்தின் இ(ஓ)டுக்கமான வாயிலை முன்வைக்கிறார்.

## இயற்கைச் சூழல், இயேசுவின் போதனைக் கருவிகள்:-

இயேசு தனது போதனையிலே, இயற்கைச் சூழலைப்பயன்படுத்தி பல உண்மைகளைப் போதிப்பதைக் கவனிக்கலாம். நாம் அன்றாடம் பார்க்கும் பறவைகள் இறைவனை நம்பியே வாழ்கின்றன. நாம் பறவைகளைவிட மேலானவர்கள் (லூக் 12:24). கவலையின்றி வாழ வானத்துப்பறவைகளை உற்று நோக்கச் சொன்னவர், சிட்டுக் குருவிகளிடமிருந்து (மத். 10:29- 31) இறைவனின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் உணர அழைக்கிறார். வயல்வெளி மலர்களைப் பார்க்கும் நாம் (மத்.6:28-29), உடை உடுத்துவதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அதிலும் முக்கியமாக நம்பிக்கை குன்றிய நிலையில் வாழ வேண்டியதில்லை.

இறைவேண்டலின் விளைவுகளைப்பற்றி விளக்கக் கையாளும் உவமையில், "உங்களுள் எவராவது ஒருவர், அப்பத்தைக் கேட்டால், தன் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது பிள்ளை மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? (மத.7:9-10). எப்படி நம் பிள்ளைகளுக்கு நாம் தீயவற்றைக் கொடுக்காமல் நல்லவற்றைக் கொடுப்போமோ, அது போல நம் விண்ணகத்தந்தையும் தூய ஆவியைக் கொடுத்து நம்மை வழிநடத்துவது உறுதி" என்று தெளிவாக்குகின்றார்.

## நிறைவாக

இயற்கையைக் காணும் நமக்கு, அதனைப் படைத்தவரைக் கண்டுகொள்ளும் ஞானம் தேவை. "கடவுளைப்பற்றி அறியக்கூடியதெல்லாம் அவர்களுக்குத் தெளிவாக விளங்கிற்று; அதை கடவுளே அவர்களுக்குத் தெளிவுறுத்தியிருக்கின்றார். ஏனெனில், கண்ணுக்குப் புலப்படா அவருடைய பண்புகள் அதாவது, என்றும் நிலைக்கும் அவருடைய வல்லமையும், கடவுள் தன்மையும் உலகப் படைப்புமுதல் அவருடைய செயல்களில் மனக்கண்களுக்குத் தெளிவாய்த் தெரிகின்றன. ஆகவே, அவர்கள் சாக்குப்போக்குச் சொல்வதற்கு வழியே இல்லை" (உரோ. 1:19- 20). படைப்பைக் கண்ணோக்கும் நாம், படைத்தவரைக் கண்டிப்பாய் நினைக்க வேண்டும்.

### துணைநின்ற நூல்கள்:-

01:- பரிசுத்த வேதாகமம் (விளக்கவுரைகளுடன்)
02:- விவிலிய விருந்து ஒக் -2004.



# இயற்கையில் இறைவனை அறிதல்

அருட்சகோ. சி.பற்றிக் லியோ அ.ம.தி

இருப்பே வெறுப்பாகும் இவ்வுலகில் இறைவனின் இருப்பே கட்டுக்கதையாகி வரும் இவ்வுலகில் இயற்கையில் இறைவனை இனம் காண்பது என்பது விந்தையான விடயம் என்ற எண்ணம் ஏராளமானோர் மத்தியில் மலிந்துள்ளது என்பதில் ஐயம் இல்லை.

இறைவனே இல்லை என்று தீர்க்கமாய் இருப்போர் இறைமறுப்புக் கொள்கையினர். இடைவிடாத இன்னல்களையும் தீராத தீமைகளையும் கண்டு இறைவல்லமை இருக்கின்றதா? இல்லையா? என்று எண்ணிப்பார்க்க முடியாது என முற்றுப்புள்ளி வைக்கின்றனர் இறை அறியொண்ணாமை வாதத்தினர் (Agnostics). உலகின் உடமைகளையும் உழைப்பையும் உயர்வையும் வாழ்வாக எண்ணி, பரம்பொருளிற்கு ஈடாக படைப்புப்பொருளைப் பற்றிக் கொண்டு, உன்னத வாழ்வைவிட்டு உலகியல் வாழ்வில் இருப்பவர்கள், இறை இருப்பை எண்ணிப்பார்க்கவே எத்தணிக்காத உலகியல் வாதிகள் என ஏராளமானவர்கள் இருக்கின்ற உலகில் இறைவனை நம்பி "தூணிலும் இருப்பாண்டி, துரும்பிலும் இருப்பாண்டி, நம்பியவர் நெஞ்சில் நிற்பாண்டி" எனப்பாடி வாழ்பவரும் இருக்கத்தான் செய்கின்றனர். அனைத்திலும் அனைத்துமாய் அனைத்திற்கும் அடிப்படையில் ஒரு 'இருத்தல்' இருக்கின்றது. அந்த இருத்தலே இறை இருத்தல் என்கின்றது இறையியல் வாதம். இந்த "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே"(வி.ப.3:14) எனும் இறைவனை மனிதன் இயற்கையில் இனம் காண முடியுமா? வேண்டாம் என்கிறது வேற்றினம். முடியாது என்கின்றனர் முயலாதவர்கள். முடியும் என்கின்றது வேதமும் வேதபோதனையும். ஏனெனில் தி.பா 14:17 கூறுகின்றது. "அவர் தம்மைப்பற்றிய சான்று எதுவும் இல்லாதவாறு விட்டுவிடவில்லை. ஏனெனில், அவர் நன்மைகள் பல செய்கிறார். வானிலிருந்து உங்களுக்கு மழையைக் கொடுக்கிறார். வளமிக்க பருவகாலத்தை தருகிறார். நிறைவான உணவளித்து உங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கச் செய்கிறார்." (யோசு. 3:10). வாழும் இறைவன் உங்களிடையே இருக்கிறார் என்று இதனால் அறிவீர்கள் என்பது விவிலியத்தின் சாரம்சம். இவ்வாறு மேலும் பல இறைவாக்குகள் இயற்கையில் இறைவனின் பிரசன்னத்தை இயம்புகின்றன. ஒளி, தீ, மேகம், காற்று, நீர், படைப்பு இவற்றிலும் மேலாக மனிதனில் இறைசாயலும் பாவனையும் பிரசன்னமாயிருக்கின்றன. "என் உறைவிடத்தை உங்கள் நடுவில் நிறுவுவேன்... உங்கள் நடுவே நான் உலவுவேன் நானே உங்கள் கடவுள்" என்கிறார் ஆண்டவர் " ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்! பூவுலகம் உம் படைப்புக்களால் நிறைந்துள்ளது... நீர் உமது முகத்தை மறைக்க, அவை திகிலடையும், நீர் அவற்றின் மூச்சை

நிறுத்திவிட்டால், அவை மாண்டு மறுபடியும் புழுதிக்கே திரும்பும்'' என படைப்பில் இறைவனை இனங்காணும் 104வது திருப்பாடல் கூறுகின்றது. இவ்வாறு அனைத்திலும் இறை பிரசன்னம் அமைந்திருப்பதை வேதம் கூறுகின்றது.



இப்படியாக இயற்கையில் உறையும் இறைவனை மனிதன் இனம் காண முடியுமா? மனிதன் இயல்பிலே தேடல் உள்ளவன். அவனது அழைப்பும் அமைப்பும் இறைமையை நோக்கிய ஒரு தேடலாகும் . இந்த அழைப்பை நிறைவேற்றவே அறிவாற்றலுடன் பகுத்தறிவுடைய உயரியபடைப்பாகப் படைக்கப்பட்டுள்ளான் இறை இருத்தலில் இணைந்த இருத்தலே தன் இருத்தல் என்பதை உணர்ந்து இன்புற்றிருத்தலே அவனது அழைப்பின் மேன்மை. மனிதன் தனது 'தங்கி இருத்தலின்' ஆதாரம் இறைவன் என்பதை அறிந்து உணர இரண்டு வழிகள் உண்டு. 1. மனிதனிற்கு இயற்கையாகக் கொடுக்கப்பட்ட அறிவின் ஒளியில் ஆண்டவரை அறிதல். 2. சிறப்பாகக் கொடுக்கப்படும் இறைவெளிப்பாட்டின் மட்டிலான விசுவாச ஒளியினால் ஆண்டவரை அறிதல்.அறிவைப்பயன்படுத்தி படைப்பின் ஊடாகவும் மனச்சான்றின் ஊடாகவும் இறைவனை மனிதன் அறிந்து கொள்ள முடியும் அனைத்தின் முதலும் முடிவுமான இறைவனை மனித அறிவின் ஒளியில் படைப்பைக்கொண்டு அறிந்து கொள்ள முடியும் என்பது அறிஞர்கள், இறையியல் வல்லுனர்களின் கருத்தும், திருச்சபையின் படிப்பினையுமாகும். திருச்சபையின் பெரும் இறையியலாளரும் அறிவியல் மேதையுமான தூய தோமஸ் அக்குவினாஸ் இறைஇருத்தலை உறுதிப்படுத்தக் கூடிய ஐந்து வழிகளை முன்மொழிகின்றார். கிரேக்க தத்துவவியலின் பிரதான வாதங்களை சுருக்கமாக தனது 5 வழிமுறைகளில் கையாண்டு, அவை இறைவன் ஒருவர் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்த உதவுகின்றன என நிறுவுகின்றார்.

## வழிமுறை01

இயற்கையின் நியதிப்படி அசைகின்ற, இயங்குகின்ற அல்லது இடப்பெயர்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்ற ஒரு பொருள் தானாக இயங்குவதில்லை பிறிதொரு பொருளினால் இயக்கப்படுகின்றது. இந்த இயக்கப்பாடானது ஒரு பிரமாண்டமான சுழற்சி முறையினாலோ அல்லது தொடர் சங்கிலி முறையிலோ நிகழ்வது அல்ல. அவற்றிற்கு ஆரம்ப இயக்கத்தை ஏற்படுத்திய ஓர் காரணியாலோ இயக்கப்பட்ட ஒன்றாக இருக்க முடியாது. எனவே, சுய இயக்கப்பாட்டை உடைய சுய இயங்கி ஒன்று உண்டு. இந்த இயக்கப்படாத இயக்கத்தை, அடிப்படை இயக்க சக்தியை நாம் இறைவன் என அழைக்கின்றோம். நாம் காணுகின்ற தானியங்கி இயந்திரங்கள்,

கடைகள், வங்கிகளிற்குக் கூட ஓர் இயக்கசக்தி வழங்கப்படுகின்றது. வழங்கப்படும் சக்தியை உருவாக்க பிறிதொரு இயக்கப்பாடு நடைபெறுகின்றது. இவ்வாறாக நீண்ட ஓர் இயக்கத்தொடர் ஓர் இடத்தில் ஆரம்ப நிலையை அடையவேண்டும். அந்த ஆரம்ப இயக்கமானது தானாக, சுயமாக பிறகாரணிகளின் செல்வாக்கின்றி இயங்கியிருக்க வேண்டும். அதுவே தூய தோமாசின் கருத்துப்படி "இயக்கப்படாத இயங்கியயன்" இறைவன், உண்மையான இறைவன், உண்மையான தானியங்கி.

## வழிமுறை02

தூண்டல் துலங்கல், விசை வினை, ஆக்கம் விளைவு, காரணம் காரணி எனும் தொடர்புகள் இயற்கை நியதிப்படி நிகழ்வதை நாம் காண்கின்றோம். அதாவது, ஒரு நிகழ்வு அல்லது விளைவானது பிறிதொரு செயற்பாட்டில் தங்கியுள்ளது. உதாரணமாக, நீரானது ஆவியாகி முகில்களாகின்றது. முகில்கள் ஒன்று சேர்ந்து மழை முகில்களாகின்றன. அவை மழையாக மண்ணில் வீழ்ந்து நீர் நிலைகளை, அருவிகளை உருவாக்கி, கடலில் கலக்கின்றன. இவ்வாறு சுழற்சி முறையில் நடைபெறுகின்றது. நீர் ஆவியாகவோ அல்லது முகிலாகவோ ஒரே நேரத்தில் இருக்கமுடியாது. தன்மை வடிவங்களில் வேறுபட்டு, வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தி, மழையாக மாறுவது போன்று ஒரு விளைவானது அதற்குரிய காரணியை முழுமையாக தன்னகத்தே கொண்டிருக்க முடியாது. தூண்டல் வேறு துலங்கல் வேறு. காரணமும் காரியமும் ஒன்றாக இருக்க முடியாது. தனது இருத்தலை ஆரம்பிக்கின்ற எதுவும் அதற்குரிய காரணத்தை முழுமையாகத் தன்னகத்தே கொண்டிருக்க முடியாது. நீராவி நீரை முழுமையாகக் கொண்டிருந்தால் அது நீராவி அல்ல, நீர் ஆகும்

நமது புலனறிவிற்கும் அறிவியல் அனுபவத்திற்கும் எட்டியபடி படைப்பு அனைத்திற்கும் ஒரு தொடக்கமும் முடிவும் உண்டு. ஆகவே, அவை தொடங்குவதற்கு அவற்றில் இருந்து வேறுபட்ட ஒரு காரணம் இருக்கவேண்டும். படைப்பு எனும் துலங்கலிற்கு ஒரு படைப்பாளன் தூண்டி இருக்கவேண்டும். இக்காரணம் அல்லது தூண்டி அடிப்படையான ஆரம்பக் காரணியாக இருக்கவேண்டுமாயின் சுயதூண்டியாக, சுயகாரணியாக இருக்கவேண்டும் எனும் முடிவிற்கு வருகின்றோம் இந்த சுயமான மூலக்காரணியையே நாம் கடவுள் என்கின்றோம்.

## படிமுறை 03

படைப்பில் அனைத்தும் வரையறைக்கு உட்பட்டவை. அதாவது ஒரு பொருள் இருக்கலாம் அல்லது இல்லாது போகலாம் உலகில் படைப்புக்கள் இருப்பதையும் இல்லாது போவதையும் காண்கின்றோம். அவை உருவாகுவதற்கும் அற்றுப்போவதற்கும் உரிய முழுமையான காரணம் அந்தப் படைப்புக்களில் மட்டும் இருப்பதாக கண்டு பிடிக்கப்படவில்லை. உருவான படைப்பு அற்றுப்போகுமாயின் ஒரு காலத்தில் எதுவும் இல்லாத நிலை உருவாகி இருக்கும்.

ஆனால், இன்றுவரை ஏதோ ஒன்று இருக்கின்றது. எனவே, வரையறைக்கு அதாவது பிறப்பிற்கும் இறப்பிற்கும் உட்படாத ஒன்று இருக்க வேண்டியது அவசியமாகின்றது. இந்த அவசியமான இருத்தல் முதலோ முடிவோ அற்ற ஒன்றாகவும், அவசியமானதும் , தனித்துவமானதும், அடிப்படையானதுமாக இருக்க வேண்டியது இன்றியமையாதது. அத்தகைய காலவரையறைக்கு உட்படாத, அவசியமான இருத்தலை நாம் கடவுள் என்கின்றோம்.

## வழிமுறை 04

உலகில் நாம் பல ஒப்பீடுகளை மேற்கொண்டு தராதரங்களைக் கணிப்பிடுகின்றோம். முழுமையான ஒன்று என நாம் கணிப்பிடும் ஒன்றுடன் அதற்கு ஈடான ஒன்றை ஒப்பிட்டு தரத்தை மதிப்பிடுகின்றோம். அதுபோல், அழகு, உண்மை, நன்மை போன்றவற்றையும் நாம் ஒப்பிடுவதுண்டு. எனவே, அனைத்திற்கும் இலக்கணமான ஒன்று இருக்க வேண்டும் என்பது இன்றியமையாத ஒன்று. பரிபூரணமான நிறைவைக் காண்பிக்கும் பொருட்களைக் காண்கின்றோம். அவை தம்மிலும் மேலான ஒரு முழுமை, பூரணத்துவம் உண்டு என உறுதிப்படுத்துகின்றன. அவ்வாறான முழுமையை பரிபூரணத்தைக் கொண்ட ஓர் இலக்கணமான இருத்தலை நாம் இறைவன் என அழைக்கிறோம்.


## வழிமுறை 05

இயற்கையின் செயற்பாடுகள் அனைத்தும் செயற்படும் அங்கிக்கும் அல்லது பொருளிற்கும் ஏனைய படைப்புகளிற்கும் பங்கம் ஏற்படா வண்ணமே நிகழ்கின்றன. பொது நன்மையை அடிப்படையாகக் கொண்டே அனைத்தும் இயற்கை நியதிக்கு ஏற்ப நிகழ்கின்றன. இயற்கை யாகவே நிர்ணயிக்கப்பட்ட ஒரு நியமம், ஒழுங்குமுறை உண்டு. இத்தகைய அதிசயிக்கத்தக்க நியதி தானாகத் தோன்றியிருக்க முடியாது. மிகுந்த அறிவாற்றலும் வல்லமையும் கொண்ட ஒன்றே உருவாக்கி இருக்கவேண்டும் என்பது வெளிப்படை உண்மை.

இந்த பிரபஞ்சம் சிக்கலான பல முடிவுகளையும், வழிமுறைகளையும் முரண்படா வண்ணம் தன்னகத்தே கொண்டுள்ளது. மனித அறிவினால் முற்றுமுழுதாகப் புரிந்து கொள்ள முடியாத திட்டம், ஒழுங்கமைப்பு ஒன்று உள்ளது. அந்த திட்டத்தை தனித்துவமான அறிவாற்றல் படைத்த ஒன்றே நெறிப்படுத்த முடியும். இவற்றை உருவாக்கி நெறிப்படுத்துகின்ற தனித்து வமான ஞான வல்லமையை, பிரதான ஒழுங்கமைப்பாளரை, ஆக்குனரை நாம் கடவுள் என்கின்றோம்.

பிரபஞ்சத்தில் ஒழுங்குகளும், தீர்க்கமான விதிகளும் உண்டு. படைப்புக்கள் மத்தியில் ஒரு பொதுவான ஒற்றுமைத்தன்மையும் இணக்கப்பாடும் காணப்படுகின்றது. எல்லா இடமும்

இயற்கை விதிகள் உண்டு அதற்கு ஏற்பவே செயற்பாடுகளும் வளுக்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. மிக நுண்ணிய புலனிற்கு உட்படாத நிகழ்வுகள் முதல் பிரமாண்டமான செயற்பாடுகள் வரை அனைத்தும் குறித்த திட்டத்திற்கு அமைவாகவே நிகழ்கின்றன. இவை அனைத்தும் நமக்கு ஒரு பெரும் பாடத்தைப் புகட்டுகின்றன (ஞான. 8:1).



தூய தோமஸ் அக்குவினாசின் கருத்துப்படி இயற்கையின் அனைத்து நிகழ்வுகளையும் நாம் முற்றுமுழுதாக அறியமுடியாது. நன்மை, இன்பம் மட்டுமல்ல, தோல்வி, துன்பம் போன்றவற்றையும் வாழ்வில் நாம் அனுபவிக்கின்றோம். அவை அனைத்தும் படைப்புகளிற்கு மேலாக ஒரு சக்தி உண்டு என்பதை நமக்கு புகட்டுகின்றன. அந்த பிரபஞ்ச சக்தியை, தனித்துவமான, அவசியமான இருத்தலை நாம் கடவுள் என அழைக்கிறோம்.

மனித வரலாற்றில் இறைபிரசன்னத்தை நிரூபிக்கப் பயன்படுத்தப்பட்ட வாதங்களில் பௌதீகவாதம் பிரதானமானது. அதன்பிரகாரம், பிரபஞ்சம் , படைப்பு இருப்பது எவ்வாறு உண்மையோ, அதே போன்று, அதை உருவாக்கியவரின் பிரசன்னமும் உண்மையானது என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும். படைப்பு சுயமாக தனது இருத்தலை உருவாக்கவில்லை. அது படைக்கப்பட்டது. அதற்கு தொடக்கம் உண்டு அவ்வாறாயின், யார் இதைப் படைத்தது? இங்கு காரணகாரிய விதி பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு விளைவிற்கும் அதனைத் தோற்றுவிக்கத்தக்க முற்காரணம் உண்டு. நாம் எதிர்கொள்ளும் எந்த விடயத்திற்கும் தகுந்த முற்காரணம் ஒன்று உண்டு. ஏனெனில், வெறுமையிலிருந்து எதுவும் தோன்ற முடியாது. ஒரு காலத்தில் வெறுமை மட்டும் இருந்திருந்தால் இன்றும் வெறுமைதான் இருந்திருக்கும். ஆனால் இன்று பிரமாண்டமான படைப்பு உண்டு. எனவே காலவரையறைக்கு உட்படாத சுயமான ஒன்று இருக்கவேண்டும்.

முதலும் முடிவுமற்ற அந்தக் காரணி அனைத்தும் அறிந்ததாக இருக்க வேண்டும். ஏனெனில் படைப்பில் அறிவாற்றல் உடையனவும் இருக்கின்றன. மனிதன் அறிவுடையதும் அறிவுவிருத்தி செய்யக் கூடியதுமான ஒரு படைப்பு. ஆனால், விளைவு அதன் காரணத்திற்குரிய சில தன்மைகளை பிரதிபலிக்குமே தவிர, காரணத்தை முழுமையாக விரதிபலிக்க முடியாது. எந்த ஒரு காரணியும் தன்னகத்தே இல்லாத, முற்றிலும் மாறுபட்ட ஒன்றினை விளைவில் ஏற்படுத்த முடியாது. ஒரு தாவரம் தனது தாய்தாவரத்தின் இயல்புகளை முழுமையாக கொண்டிருக்கவும் முடியாது, தாய்தாவரத்தை முழுமையாக தன்னகத்தே கொண்டிருக்கவும் முடியாது. தாய்தாவரத்தை விட மேலானதாகவும் முடியாது. எனவே, இயற்கை இறைவனை பிரதிபலிக்கின்றது. அந்த பிரதிபலிப்பிலிருந்து நாம் அவரை

அறிந்து கொள்ள முடியும்.

இயற்கைக்கு மேலான ஓர் அதீத சக்தி உண்டு என்பது விஞ்ஞான பூர்வமான உண்மை. பிரபஞ்சம் உண்டு அன்புண்டு, அறிவியல் வாழ்வுண்டு, அழகுண்டு , அதிசயம் உண்டு, இந்த இயற்கையில் இவை அனைத்திற்கும் மேலான தகுந்த முதற்காரணம் உண்டு. தன்னிச்சையான வரையறைக்குட்படாத சுயமாக இருக்க இயங்கக்கூடிய ஒன்று பிரபஞ்சத்தைப் படைத்துள்ளது என்பது தெளிவாகின்றது. சுயமாக சுதந்திரமாக இயங்கும் வியத்தகு இருத்தல் ஒன்று இருக்கவேண்டும். வேதாகமக் கூற்றுப்படி "ஆதியிலே கடவுள்...." அனைத்திற்கும் அடிப்படையும் காரணமுமாய் அமைவதைக்காட்டுகின்றது. உலகில் அறியப்பட்ட அனைத்தையும் விட முழுமையாக அறியப்படாத ஒன்று உண்டு எனும் உள்ளுணர்வு மனிதனின் இறைமையை நோக்கிய தேடலே, இறை உணர்வை எண்பிக்கின்றது. இயற்கையான மனிதன் இயற்கையில் இறைவனின் இருத்தலை கண்டால் இன்பம் என்பதை:

"தனக்குவமையில்லாதான் தாள் சேர்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது" என திருவள்ளுவர் கூறுகிறார்.

ஆதிக்கிறிஸ்தவ சமூகம் ஆண்டவரை தமது சமூக சுதந்திரம், மன்னிப்பு, ஒற்றுமை, சமாதானம், சமத்துவம் என்பவற்றில் அடையாளம் கண்டனர். (கலா .5:22, எபே.4:3)

"கடவுளை அறியாத மனிதர் அனைவரும் இயல்பிலேயே அறிவிலிகள் ஆனார்கள். கண்ணுக்குப் புலப்படும் நல்லவற்றினின்று இருப்பவரைக் கண்டறிய முடியாதோர் ஆனார்கள். கைவினைகளைக் கருத்தாய் நோக்கியிருந்தும், கைவினைஞரை அவர்கள் கண்டுகொள்ளவில்லை... ஏனெனில், படைப்புக்களின் பெருமையினின்றும் அழகினின்றும் அவற்றைப் படைத்தவரை ஒப்புநோக்கிக் கண்டுணரலாம்..... உலகை ஆராய்ந்தறியும் அளவுக்கு ஆற்றல் அவர்களுக்கு இருந்தபோதிலும், இவற்றுக்கெல்லாம் ஆண்டவரை இன்னும் மிக விரைவில் அறியத் தவறியது ஏன்? " (சால. ஞானம் 13:1-9)



# இயற்கைச் சமநிலையும் இறையியலும்

திரு. ஆர். திலகறட்ணம்

இயற்கை என்பது புவியையும் அதன் சூழலையும், அதன் நிலையையும் உள்ளடக்கியது. நிலை என்ற நோக்கில் இயற்கை சமநிலைப்பாங்கானது. இயற்கைச் சமநிலை மெகாவேக, அகோர வெப்பநிலை, தீவிரஇரசாயனமாற்ற தொடர் இயக்கநிலையில் நிலைநிறுத்தப்படுகின்றது. இந்த நிலைப்பாட்டை உணர்ந்த நம்முன்னோர் ஏன் இன்றும் கூட இயற்கையை இறையாக வணங்குகின்றனர். ஆனால் இறையியலாளர் இறையின் மாட்சிமையை வெளிப்படுத்த இயற்கைச் சமநிலையை ஒரு உதாரணமாக காட்டுவர். தவிர இறையின் சாயலாகவே இயற்கையைப் பார்ப்பது இறையின் மாட்சிமையை ஏற்றுக் கொள்வதற்கு ஒப்பான கருதுகோளே.

சூரியன் உதிக்கின்றது, இருள் நீங்கி ஒளி பரவுகின்றது, இரவு முழுவதுமான சந்திரவொளியின் குளிர்ச்சி அகன்று சூரிய வெப்பம் வியாபிக்கின்றது. இரவு வீசிய நிலக்காற்று திசைமாறி கடற்காற்றாகி நிலத்தை நோக்கி வீசுகின்றது. சூரியன் மெல்ல மெல்ல நடுவான் நோக்கி நகர வெப்பம் சுட்டெரிக்கின்றது. வெப்பத்தில் நீர்நிலைகள் ஆவியாகி மேலெழுகின்றது. நிர்மலவானம் அசையத்தொடங்குகின்றது. ஆங்காங்கே நீராவிவெண்புகைகள் ஓடி கருமேகங்களாகச் சேர்கின்றன. அமைதி இழந்தகடல் பொங்கித் தரையை நோக்கி வேகமாக அலைகளாக நகர, மின்னல், இடிமுழக்கத்துடன் மழை பெய்கின்றது. அனலாக வீசிய காற்று இதமான குளிர் காற்றாக மாற, மணல் மூடி காத்திருந்த வித்துக்கள் முளைவிட்டுத் தலைநமிர்கின்றன. சூரியன் தன்பொழுதை முடித்து செம்மஞ்சளாக மறைகின்றது.

இரம்மியமான இந்த இயற்கையின் மறுபக்கம் ஆறுமாதத்துக்கு சூரியஒளி கிட்டாத வட, தென் துருவப்பகுதி நீண்ட பரந்த பனிப்பிரதேசம். கிறீன்லாந்து மட்டும் உருகினால் கடல்நீர்மட்டம் எண்பதடி உயரும் என அச்சுறுத்திக்கொண்டும் மூன்றில் இரண்டு பங்கு பரப்பளவை சுவீகரித்துள்ள சமுத்திரம் சந்திரனையே தனக்குள் மறைக்கும் மரியானா ஆழி, காலநிலை மாறுபாடுகளுக்கமைய ஒரு அந்தத்திலிருந்து மறு அந்தம் நோக்கி நகரும் சமுத்திர நீரோட்டங்களின் அச்சுறுத்தலுக்கும், அளவுக்கதிகமான வெப்பத்தையும், கடும்குளிரையும் ஒரு நாளில் அனுபவிக்கும். பரந்துவிரிந்த பாலைநிலங்கள், வேகமாக வீசும் மணற்புயலால் மாறிமாறி உருவாகும் மணல்மேடுகளும், சொரிமணல்ப்பாங்கும்,

புகைகக்கிக்கொண்டு வெடித்துச்சிதற தருணம் பார்த்துக்கொண்டிருக்கும் எரிமலைகளும் மேலும் அச்சுறுத்தலாக மனிதனுக்கு சவால் விடுகின்றன.

அமைதியையும், அச்சுறுத்தலையும் பேணுகின்ற பாங்கில், பூமி தன்னைத்தானே மணிக்கு 1692 கிலோமீற்றர் வேகத்தில் சுற்றிக்கொண்டும், தன்வட்டப்பாதையில் சூரியனை செக்கனுக்கு 29.8 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்துக்கொண்டும் இருக்க "கோர்" எனப்படும் புவியின் உட்பகுதி ஐயாயிரம் செல்சியசிற்கு மேற்பட்ட வெப்பத்தில் அனைத்தையும் வெப்பத்திரவ வடிவில் பேணுவதும் இயற்கை என்றாகிற்று.

பூமி இந்த மெகாவேக, வெப்ப, இரசாயன, இயக்க அமைதியை அடைந்து ஐந்துமில்லியன் வருடங்கள் ஆயிற்று என்பதும் சுமார் ஐயாயிரம் மில்லியன் ஆண்டுகளுக்கு முன் "சுப்பநோவா" எனப்படும் "ஒருமை" அண்டத்தில் வெடித்துச் சிதறிய நிலையில் சிதறிய வெப்பத்தூசுகள் இயக்க நிலையில் திரண்டு தூசுத்தொகுதியாகி மெகாவேக, வெப்ப, இரசாயன மாற்றங்களால் புவியாயிற்று என்பது புவிச்சாத்திரவியலாளர் கருத்து.

இந்த "ஒருமை" என்ன? இது வெடித்துச்சிதறக் காரணம் என்ன? இதற்கு இறையியலாளர் "மனிதன் சக மனிதனுடன் அன்பு, சமாதானம் சகோதரத்துவத்துடன் வாழ்ந்து புவியை ஆட்சிசெய்து, இறையில் சங்கமிக்கும் இறைசித்தமே" இந்த ஒருமையும், படைப்பும் என்று நம்புகின்றனர். தவிர மனிதன் இயற்கைச்சமநிலையை அனுசரித்து வாழவேண்டும். அனுசாக்காது செயற்பட்டால் இயற்கைச்சமநிலை பிறழ்வால் அழிவுகளை சந்திக்கவேண்டும் என்பது இயற்கையான இறைசித்தமாக அமையும்.

இயற்கைச்சமநிலை என்ற பொருளில் தளம்பிய அல்லது மாறுபட்டுக் குழம்பிய இயற்கை நிலை மறுபடியும் சீர்செய்யப்பட்டு சமநிலைப்படும் என்பதாகும். இங்கு இயற்கைச்சமநிலை என்பது இறையியல் நோக்கில் அன்பு, சமாதான வழியில் மட்டும் தோன்றக்கூடியது என்ற நம்பிக்கையின் பலத்தில் நிலைநிறுத்தப்படுகின்றது. காரணகாரியங்கள் நிலைப்பாட்டில் அபிவிருத்தி நோக்கில் எடுத்த முனைப்புக்கள் இயற்கை சமநிலை முன் மண்டியிட்ட உதாரணங்கள் நாளந்தம் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் மனிதன் தன்னை நியாயப்படுத்தப் பழகிக்கொண்டது ஒரு துர்ப்பாக்கியமே. மனிதனின் இந்த காரணகாரிய நியாயங்கள் வலுப்பெற்று சொற்ப ஆண்டுகள் தான் ஆயிற்று ஆனால் இறையியல்நியாயங்கள் யுகங்களுக்கு மேற்பட்டவையாகும்.

இறையியலானது இயற்கை இயக்கங்கள் எல்லாவற்றையும் மனிதனை மையப்படுத்தியதாக வரையறை செய்வதனால் மனிதன் இயற்கையை அனுசரித்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டான். இதனால் மூதாதையர்கள் இயற்கையைச் சீண்டுவதை ஓரளவிற்கு தவிர்த்தனர். தவிர இறையியலின் அன்பு, சமாதானம், சகோரத்துவம் என்ற கோட்பாடு உயிரினங்கள்,

தாவரங்கள் மட்டுமல்ல இயற்கையின் அசைகின்ற அசையாத எல்லா அம்சங்களிலும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் இன்றைய அபிவிருத்தி என்ற கருதுகோள் தனிமனித நலனை முன்னிறுத்தி இயற்கையை கட்டுப்படுத்துவதாக அமைகின்றது.

மனிதன் உயிரினங்கள் மத்தியில் சுமார் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் தலைநிமிர்த்தி னான். அவன் தன்நிலை உணர்ந்து தலைமை எற்கத்தொடங்கி சுமார் ஐயாயிரம் ஆண்டு களாயிற்று.ஆனால்அவன் உலகை அறியமுற்பட்டு ஐந்நூறாண்டுகள் தான் கடந்துள்ளது. அபிவிருத்தி என்ற கருத்தில் இயற்கைச்சமநிலையை நேரடியாக சீண்டத்தொடங்கி சுமார் ஐம்பதாண்டுகள் ஆகின்றன. இந்த ஐம்பதுவருட அனுவபத்தைக்கொண்டு ஐந்துமில்லியன் ஆண்டுகால இயற்கையைச் சீண்ட நினைப்பது அதிகபிரசங்கித்தனமாகக் கொள்ளப்பட வேண்டியதே.

மனிதனின் செயற்பாடுகளுக்கு மத்தியில் இயற்கையின் சமநிலைத்தாக்கங்கள் கண்கூடாகத் தெரிகின்ற ஒன்று எனக்கொள்ளலாம். இன்று நாம் பயன்படுத்தும் பெற்றோலியம் பல்லாயி ரம் வருடங்களுக்குமுன் வாழ்ந்த உயிரினங்கள், நிலத்தின் கீழ் அமுக்கப்பட்ட நிலையில் மாற்றமடைந்த ஊனம் மேலுயர்த்தப்பட்ட சுண்ணாம்புப்பாறைகள் கடல்வாழ் உயிரினங் களின் படிமம். இந்த யதார்த்தங்கள் இயற்கைச்சமநிலையின் கோரத்தாண்டவத்தை உணர்த்தக்கூடியதே இதையும் நிராகரிக்கின்ற அளவுக்கு இயற்கைச்சமநிலையை சீண்டு வது இயற்கை நோக்கில் பேரழிவை விலைகொடுத்து வாங்குவதாகவும், இறையியல்நோக்கில் பாவத்துக்குரிய வாழ்வாகவும் கொள்ளத்தக்கது.

குறிப்பாக தமிழர் வரலாற்றில் தென்குமரி கண்டத்தை காவுகொண்ட கடல்கோள் தென்ம துரை முழுவதையும் கடலினுள் அமிழ்த்திவிட்டதாக கூறப்படுகின்றது. அதுமுதல் உலகை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் எரிமலைவெடிப்புக்கள், நிலநடுக்கங்கள், காட்டுத்தீ, சூறாவளி, பெருமழை, வெள்ளப்பெருக்கு, சுனாமி கடல்ப்பேரலைகள் என்பன இயற்கைச்சமநிலையின் செயற்பாடாகவே கொள்ளத்தக்கன. ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகாலத்தில் இந்த அனர்த்தங்களின் காலஇடைவெளி சுருங்கிக்கொண்டு வருவது இயற்கைச் சமநிலைக்கு எதிராக மனிதமுயற்சிகள் அதிகரித்திருப்பதையே காட்டுகின்றது. அல்லது இறைச்சித்தத்திற்கு எதிராக மனிதமுயற்சிகள் அதிகரித்திருப்பதையே காட்டுகின்றது.

அபிவிருத்திச் செயற்பாடுகள் சமூக, அல்லது நாடு என்ற நோக்கில் முன்னெடுக்கப் படுகின்றது. இதனால் ஒருநாட்டிற்கு நன்மையானதாகக் கருதப்படக்கூடிய அபிவிருத்திச் செயற்பாடு வேறொரு நாட்டிற்கு தீமைபயப்பதாக அமைகின்றது. உதாரணம் சேதுசமுத் திரத்தை ஆழமாக்கும் செயற்பாடு தென்னிந்திய கப்பல்போக்குவரத்துக்கு சாதகமானதாக இருந்தாலும் இலங்கைத்தீவின் புவிச்சூழலை அச்சுறுத்துவதாக அமைகின்றது. அவ்வாறே

உலக வல்லரசுகள் தமது அணுச்சோதனைகளை நிலத்தின் கீழ் மேற்கொள்வது முழு உலகிற்குமே அச்சுறுத்தலாக அமைகின்றது. வான்வெளியில் நிலைநிறுத்தப்பட்ட அல்லது பிரயாணம்செய்யும் செய்மதிகள் வான்வெளியின் சமநிலையைக் குழப்பிவிடலாம்

இது ஒருபுறமிருக்க மனிதனின் இறைவிரோத செயற்பாட்டால் போட்டி, பொறாமையால் தானே வலிந்து உருவாக்கிய இரண்டாம் உலகப்போரும் ஹிரோசிமா, நாகசாகி அனுபவங்கள் கற்றுத்தந்த பாடங்களும் எவ்வித கற்றலையும் கொண்டுவரவில்லை தொடர்ந்து நாடுகளுக்கிடையிலும், சமூகங்களுக்கிடையிலும் நடந்து கொண்டிருக்கும் யுத்தங்களில் பயன்படுத்தப்படும் வெடிமருந்துகள் வெடி அதிர்வுகள் நாளாந்தம் இயற்கைச்சமநிலையை சீர்குலைக்கவே செய்கின்றன. உண்மையில் அண்மையில் யப்பானில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் எல்லாவகையான விஞ்ஞான அபிவிருத்திக்கும் சவாலாகவே அமைந்துவிட்டது. எனவே அபிவிருத்தியென்ற போர்வையில் பாதுகாப்பிற்கான, யுத்த ஆயுததளபாடங்களுக் கான பாரிய செலவைக்குறைப்பதும் இயற்கை சமநிலையைப் பேணுவதற்கான இறைசித்தத்தை நிறைவேற்றுவதற்கான முக்கிய செயற்பாடாகவே அமையும். ஏனெனில் ஏறக்குறைய உலக நாடுகளின் வரவுசெலவுத்திட்டத்தின் ஐம்பது சதவீதம் பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்படுகின்றது. இங்கு மனித விழுமியங்கள் பேணப்பட்டு நீதி, சமாதானம், அன்பு, சகோதரத்துவம், ஒப்புரவு, பகிர்ந்துவாழ்தல் என்ற இறைசித்தம் முன்னெடுக்கப்படு வதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.

ஏனெனில் இயற்கைச்சமநிலை தெய்வீகமானது.இறையன்பின் வெளிப்பாடாயிற்று, இறையின் சாயலான மனிதன் இயற்கைச்சமநிலையைப் பேணுவதற்கு கடமைப்பட்டுள்ளான். ஒரு மனிதன் தனிப்பட்ட சுயநோக்கிற்காக செய்கின்ற சிறு காரியம் கூட திரண்டு பெரிய விளைவுகளை ஏற்படுத்தலாம். இறையியல் விழுமியமான அன்பு, சமாதானம், சகோதரத்து வம் கூட இயற்கைச்சமநிலை கற்பித்த பாடமாகும். முன்னோர் இந்த விழுமியங்களைக் கடைப்பிடித்ததனால் அன்பான உலகத்தை எமக்கு விட்டுச்சென்றுள்ளனர். அவ்வாறே நாமும் எதிர்கால சந்ததிக்கு அன்பான உலகத்தை விட்டுச்செல்ல இறையன்பில் இயற்கையை சீண்டாது இசைந்து வாழ்வது அவசியம்.



# இறைவன் தந்த படைப்பைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்

அருட்சகோ. ஆ. ஸ்கரன்றாஜ்

## முன்னுரை

படைப்பு மனிதனுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட ஒரு உயர்ந்த பொக்கிஷம். படைப்புக்கள் ஒவ்வொன்றையும் பார்க்கின்ற போது கடவுள் மனிதன் மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கின்றார் என்பது புலனாகின்றது. சிறப்பாக இறைவனது படைப்புக்களை ஆழமாக அனுபவிக்கின்றபோது அவரது ஆழ்ந்த ஆளுமை, அவருக்கே உரித்தான உயர்ந்த தன்மை புலனாகின்றது. இத்தகைய அதிசயிக்கத்தக்க இயற்கையை பேணிப் பாதுகாப்பதே படைப்புக்கெல்லாம் சொந்தக்காரனாக இருக்கின்ற இறைவனுக்கு நாம் காட்டும் நன்றிக்கடன், அன்பு. இறைவனோடு நாம் நல்ல உறவை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் முதலிலே இயற்கையோடு ஒன்றித்திருக்க வேண்டும். ஏனென்றால் இயற்கையில் இருக்கின்ற படைப்புக்கள் இறைவனை பிரதிபலிக்கின்ற விம்பங்களாக இருக்கின்றன. "கடவுளுடைய கையொப்பம் படைப்பு முழுவதும் நிறைந்திருக்கின்றது. படைப்பு அனைத்துமே கடவுள் எழுதிய காதல் கடிதங்கள்" என்று இ. கார்டினெல் கூறியுள்ளார்.

## பூமித்தாய்

பூமிதான் எல்லா உயிர்களுக்கும் கருப்பை. எல்லா உயிர்களுக்கும் தாயாக இருக்கின்ற பூமி உயிர்கள் வளர்வதற்கு சக்தியளித்து அவற்றை தாங்கி நிற்கின்றது. பூமி இல்லையென்று சொன்னால் மனித வாழ்வைப் பற்றி நினைத்தே பார்க்க முடியாது. மனித வர்க்கம் பூமியின் இருப்போடு நெருங்கி தொடர்புபட்டிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. மனிதன் ஒருபோதும் இயற்கையை தனது இருப்புக்காக மட்டும் என்று நினைக்கக் கூடாது. அத்தோடு தனது பூமியை ஒரு பொருளாக நினைத்து அதனை தனது ஆளுகைக்கு உட்படுத்தக் கூடாது உண்மையில் மனிதன் இயற்கையினுடைய மேற்பார்வையாளனாகவும், பாதுகாப் பாளனா கவும் படைக்கப்பட்டுள்ளான். இந்தக் கருத்து தொ.நூ 2:15 இல் புலப்படுகின்றது. "ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு

கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்". எனவே மனிதன் தான் வாழுகின்ற சூழலை அவனது ஆற்றலுக்க உட்படுத்துவது அவனுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பாக இருக்கின்றது.

## மனிதனும் சூழலும்



"சூழல் "என்பது "உயிர்வாழும் அங்கிகளுக்கு (organism) இடையில் காணப்படும் நிலைமைகளின் மொத்தக் கூட்டு" என வரையறுக்கப்படும். உயிரற்றனவாகிய பௌதீக, இரசாயன அசேனங்களுக்கும் (Abiotic) உயிர்வாழ் சேதனங்களின் (Biotic) பரமாணங்களுக்கும் இடையிலான இடையீடுகளின் விளைவே இச்சூழலாகும். அடிப்படையில் சூழல் என்ற பதம் ' Oikos'என்ற கிரேக்கச் சொல்லிலிருந்தே தோற்றம் பெற்றது. இதன் உண்மையான அர்த்தம் "வீடு "அல்லது "இயற்கையான இருப்பிடம்"என்று பொருள் படும். இன்று மனிதர்கள் தங்கள் இல்லிடங்களைப் பற்றியே அதிகம் அக்கறைப்படுகின்றார்களே தவிர அவை அமைந்திருக்கின்ற இயற்கைச் சூழலைப் பற்றி சிந்திக்க மறந்து விடுகின்றார்கள்.

அறிவியல் வளர்ச்சி விண்ணை முத்தமிட்டுக் கொண்டிருக்கின்ற யுகத்திலே பயணித்துக் கொண்டிருக்கின்ற மனிதனது செயற்பாடுகள் அவனுக்கு இன்பத்தை தரக்கூடியவையாக இருந்தாலும் ஒருவகையில் அவை சூழலுக்கு தாக்கம் ஏற்படுத்துபவையாக இருக்கின்றன. எனவே இன்று சூழல் மாசுபடுதலும், அதனைத்தடுத்தலும் என்ற தொனிகளிலே மக்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கப்படுகின்றது. சூழலில் ஓர் அம்சம் மாற்றமடையுமாயின் ஏனையவையும் மாறுபடுவதற்கான தேவையை ஏற்படுத்தும். எனவே சூழலில் காணப்படும் இடைத்தொடர்புகளை அறியாதிருத்தலே நடைமுறையில் காணப்படும் பல சூழற் பிரச்சினைகளுக்கு காரணமாகும். இத்தகைய சூழற் பிரச்சனையினுடைய விளைவுகளை நான்கு விதங்களிலே நோக்கலாம். மக்களினங்களின் அழிவு (Genocide), உயிர்களின் அழிவு (biocide) சூழல் முறைமைகளின் அழிவு (the destruction of eco- system), பூமியினுடைய அழிவு (geocide). இந்த நான்கு கோணங்களில் சூழலியல் (சூழல்) பிரச்சினைகள் நாளுக்கு நாள் அழிவுகளை ஏற்படுத்துகின்றன என்பது அனுபவ பாடமாகக் காண்கின்ற உண்மையாய் இருக்கின்றது.

சூழல் பிரச்சினை என்பது பொதுவாக சூழல் மாசுபடுதலை, சீர்குலைவதை குறிப்பிடுகின்றது. இன்று, விஞ்ஞான, தொழில்நுட்ப புரட்சி, சமூக, பொருளாதார முன்னேற்றத்தை மேம் படுத்தல் என்பவற்றினூடாக ஏற்படும் உற்பத்திச் சக்திகளின் விரைவான அபிவிருத்தி ஆகியவற்றினால் சூழல் மாசடைகின்றது. இன்றும், சனத்தொகை வளர்ச்சி, உற்பத்திச் சக்திகளின் மிக விரைவான விருத்தி, பொருளாதார நடவடிக்கையில் இயற்கை வளங்களின் என்றுமில்லாத ஈடுபாடு என்பன இயற்கை வளங்களின் சுரண்டலுக்கும் சீரழிவுக்கும் இட்டுச் சென்றுள்ளன. சூழல் தொடர்பாக காணப்படுகின்ற சமூக பொருளாதார பிரச்சினைகளில் பட்டினி, வறுமை,நோய் என்பவற்றுக்கெதிரான போராட்டங்கள் பல நாடுகளில் நடைபெற்று வருகின்றன. UNO அறிக்கையின்படி அசுத்தமான நீரைப் பருகுவதனால் நாள் ஒன்றுக்கு 3500 குழந்தைகள் இறக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் ஒவ்வொருவரும் சுயநலத்துடன் செயற்படுகின்றமையே. சூழல் பிரச்சனை என்பது தனியே நிலம், நீர்நிலைகள், வளிமண்டலம், தாவரங்கள்,விலங்குகளோடு மட்டும் சம்மந்தப்பட்ட ஒரு பிரச்சனை அல்ல, மாறாக பசி, பட்டினி, வீடின்மை போன்ற தோற்றப்பாடுகளைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டுவது.

## இயற்கை – மனிதன்

கார்ல் மார்க்ஸ் கூறினார்: 'சமூகம் முரண்பாடுகளைக்கொண்டது' அதற்கு மாணவன் ஒருவன் கேட்டான் 'நீங்கள் சொல்லும் வர்க்க வேறுபாடுகள் ஒழிந்து வர்க்கமற்ற அமைப்பு வந்துவிட்டால் வேறு என்ன முரண்பாடு இருக்கும்?' 'மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள முரண்பாடு நீடிக்கும்' என்றார் மார்க்ஸ். மாணவன் மீண்டும் கேட்டான் இப்போது அது இல்லையா? மார்க்ஸ் சொன்னார் இப்போது இருக்கிறது. ஆனால் மனிதர்களுக்குள் ஏழை, பணக்காரர் முரண்பாடு முதன்மையாக இருக்கிறது என்றார். மார்க்ஸின் வார்த்தைகள் இன்று மிகவும் பொருத்தமானதாக இருக்கின்றன. வர்க்க வேறுபாடுகள் அதிகரிக்கின்ற அதே சமயத்தில் மனிதருக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள முரண்பாடு வளர்ச்சியடைந்து செல்கின்றமை நாம் காண்பதே. இந்த நிலையிலே எமது இருப்பு இதற்கு துணை போகின்றதாக இருக்கின்றதா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். சூழலை சுத்தமாக வைத்திருப்பதும் பாதுகாப்பதும் எம்முடைய பொறுப்பாக இருக்கின்றது. சூழல் பிரச்சினை தொடர்பாக விழிப்புணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். வருங்கால சந்ததி சொத்தோடும் சுகத்தோடும் வாழவேண்டும் என்பதற்காக பாடுபடும் மனிதன், அவர்களுக்கு அமைதியான இயற்கைச் சூழலை காட்டுவதற்கு தவறிவிடுகின்றான்.

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், தொழில் மயமாக்கல், சந்தைமயமாக்கல், நுகர்வு வெறி போன்ற நவீன பொருளாதாரக் கொள்கைகளால் மனிதருக்கிடையே முரண்பாடுகள் நீண்டுகொண்டு செல்கிறது. இத்தகைய முரண்பாடுகள்

இயற்கைச் சமநிலையை வெகுவாகப் பாதிக்கின்றது. சூழல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பெரிய அளவிலே முயற்சிகள் எடுக்காவிட்டாலும் நாம் வாழுகின்ற சூழலிலே அன்றாட செயற்பாடுகளிலே கவனத்துடனும் பொறுப்புணர்வோடும் ஈடுபடுவதன் ஊடாக இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கலாம். உதாரணமாக மிதமிஞ்சிய செயற்கை இரசாயன உரங்களுக்குப் பதிலாக இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நிலத்தின் வளத்தைப் பேணலாம்.

இன்று மனித செயற்பாடுகளால் வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்களின் நியம அளவு மாற்றமடைந்து வளிமண்டலத்தில் நச்சுக் கலந்த வாயுக்கள் சேர்கின்றன. இதன் காரணமாக ஓசோன் படை ஓட்டையாதல், பூகோளம் வெப்பமடைதல், அமில மழை போன்ற பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. வளிமண்டலத்தை மாசடையச் செய்கின்ற காரணிகளில் எமக்கு பரிட்சயமான ஒன்றாக வாகனங்களிலிருந்து வெளியேறும் காபன் கலவைகளைக் குறிப்பிடலாம். எனவே எமது தேவையற்ற வாகனப் பயன்பாட்டை குறைப்பதன் ஊடாக வளி மாசடைதலை ஓரளவு குறைக்கலாம். நீரின் பண்புகள் வேறுபடுதல் அல்லது நீரின் பௌதீக இரசாயன மற்றும் உயிரியல் பண்புகள் வித்தியாசப்படுதல் நீர் மாசடைதல் எனப்படும். எனவே தூய நீரை பருகுவதற்கு நீரை சுத்தமாக பேணுவது எமது கடமையாகும்.

பூமி தன்னுடைய 460 கோடி ஆண்டு வரலாற்றில் இதுவரை 5 முறை மிகப் பெரிய பேரழிவுகளை சந்தித்துள்ள நிலையில் ஆறாவது முறையாகப் பேரழிவை சந்திக்கத் தயாராகின்றது. இதில் காடழிப்பே பிரதான பங்கு வகிக்கின்றதென சுற்றுச் சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர். தற்போது பூமியில் உள்ள உயிரினங்கள் ஆயிரம் மடங்கு வேகத்தில் அழிந்து வருகிறது. அடுத்த நூற்றாண்டில் 10 ஆயிரம் மடங்கு வேகத்தில் அழியுமென இயற்கை பாதுகாப்புக்குழுவும் எச்சரித்துள்ளது. இக்குழுவின் அறிக்கையில் ஒரு விநாடிக்கு ஒரு கால்பந்து மைதான அளவுள்ள காடுகள் உட்பட இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதாகவும் இது இயற்கைக்கு எதிரான மனிதனின் சதியெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது விடயத்தில் மனித சமுதாயம் விழித்துக் கொள்ளாதுவிட்டால் இயற்கை வளங்களோடு மனித வளங்களும் அழிந்து போகும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் முன்னொரு காலத்தில் நிலத்தின் 75 சதவீதப்பகுதி காடுகளாகவே காணப்பட்ட போதும் தற்போது அது 24 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. அந்தளவுக்கு இலங்கையில் காடழிப்பு வேகம் முனைப்புப் பெற்றுள்ளது. காடுகள் விடயத்தில் இலங்கை தவறான பாதையில் செல்வதாக ஐ. நாவின் உணவு விவசாய அமைய வனவளத்துறை நிபுணர் எட்வர்டோ ரோஜாஸ் பிரியரீஸ் குற்றம் சுமத்தியுள்ளார். இதே வேளை சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இன்றியமையாததாக விளங்கும் பிரேசிலில் உள்ள அமேசன் காடுகளை அழிக்கும் நடவடிக்கைகள் 6 மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 593 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட காடுகள் அழிக்கப்பட்டுள்ள தாக அந்நாட்டின் சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித் துள்ளது. எனவே இத்தகைய அபாயகரமான நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாங்கள் இதைப்பற்றி அக்கறையுடன் நடந்து கொள்வதுடன், வாழுகின்ற பிரதேசத்திலே புதிய மரக்கன்றுகளை நாட்டி பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். இன்னும் காடழிப்பைத் தடுப்பதன் மூலம் அழிவின் எல்லையிலே இருக்கின்ற உயிரினங்கள், மற்றும் தாவரங்களினுடைய அழிவைக் குறைக்கலாம்.



## இயற்கையில் இறை மனித உறவு

மனிதச் சுரண்டலில் தொடங்கிய ஏற்றத்தாழ்வுகள் இன்று இயற்கைச் சுரண்டலாகவும் விரிவடைந்துள்ளன. மனிதச் சுரண்டலின் நீட்சிதான் சுற்றுச் சூழல் பிரச்சனை. சூழற்பிரச் சனைகளுக்கு அடித்தளமாக இருப்பது மனிதச் சுரண்டல். இதையே பழைய ஏற்பாட்டில் கடவுள் இறைவாக்கினர் வழியாக சாடுகிறார். (1அரச 4, 9:19) இயேசு வாழ்ந்த காலத்து சமூக, அரசியல், பொருளாதார அமைப்பைப் பார்க்கும் பொழுது பணப்பலமும் அரசியல் செல்வாக் கும் படைத்த ஒரு சிறிய கூட்டம் மிகப் பரந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர் களாக இருந்தது ( நீதியற்ற கண் காணிப்பாளர் லூக் 6:1-12). அநீதிகள் செழித்தோங்கும் போது பூமியானது குமுறி எழுந்ததை பழைய ஏற்பாட்டிலே காயின், ஆபேல் சம்பவத்திலே காண்கின்றோம்.

இறைவனுடைய பிரசன்னம் இயற்கையில் மிதமிஞ்சிக் கிடக்கின்றதை நாம் உணர்கின்றோம். உதாரணமாக ஐம்பூதங்கள்: விண், மண், நீர், நெருப்பு, காற்று ஊடாக காணலாம். (தொ.நூ 2:7:3:24, தி.பா 139). எரியும் முட்புதரில் (வி.ப 3:2) மோயீசனுக்கு காட்சி கொடுத்தார், சீனாய் மலை மீது (வி.ப 19:9) மக்களோடு பேசினார். இறைவனது பிரசன்னம் இயற்கைப் படைப்புக்கள் அனைத்திலும் நிறைந்திருக்கின்றது. சக மனிதரோடும், இயற்கையோடும் உறவு ஏற்படுத்தும் போது நாம் இறைவனோடு உறவாடுகின்றோம். எனவே இயற்கையை அழிவின் பாதைக்கு இட்டுச் செல்லும்போது இறை- மனித உறவு சீரழிகின்றது.

கடவுள் படைப்பின் சிகரமாக மனிதனைப் படைத்தார். படைப்பின் சிகரமாக மனிதன் இருக்கின் றான் என்றால் அவனை அல்லவா முதலில் படைத்திருக்க வேண்டும்? என்ற கேள்வி எழலாம். இங்கு தான் கடவுளின் திட்டம், முன்மதி புலனாகின்றது. கடவுள் மனிதன் வாழக்கூடிய இதமான சூழலை உருவாக்கிய பின்னரே அவனைப் படைத்தார். இதிலிருந்து கடவுள் மனிதன்

மீது கொண்ட ஆழ்ந்த அன்பு புலனாகின்றது. எனவே நாமும் அடுத்து வருகின்ற சந்ததியினருக்கு இயற்கை எழிலை அனுபவிப்பதற்கு கொடுத்து வைக்கவேண்டும்.

## முடிவுரை

"படைப்பு முழுவதும் பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது. தானே விரும்பி அப்படி உட்படவில்லை; அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அப்படி உள்ளது. எனினும் அது நம்பிக்கையற்ற நிலையில் இல்லை. இந்நாள்வரை படைப்புப் பொருள் அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்று தவிக்கின்றது." (உரோ.8: 22). இந்த இறைவார்த்தைப் பகுதி இன்றைய காலத்திற்கு மிகவும் பொருத்தமானதாக எனக்குத் தென்படுகிறது. ஏனென்றால் படைப்பு பிரசவ வேதனையுற்றிருப்பது உண்மை. ஆனால் இந்த வேதனைக் குரல் இறுதிக் குரலாக இருக்கக் கூடாது. மாறாக அழிவிலிருந்து ஆக்கத்திற்கு இட்டுச்செல்லும் ஓர் சமிக்கையாக, புதுப்படைப்பை உருவாக்க அழைக்கும் நம்பிக்கையின் குரலாக இருக்கின்றது. இது மானிடம் முழுவதையும் போராட அழைக்கும் இறைவனின் குரல்.


"பூமியிலுள்ள அனைத்தையும் மனிதன் ஆளட்டும்."(தொ.நூ.1: 26-28)என்று கடவுள் மனிதனுக்கு அதிகாரம் கொடுத்தார். இந்த அதிகாரத்தைக்கொண்டு மனிதன் பூமியை எப்படி வேண்டுமானாலும் ஆழலாம் என்று பொருளன்று. மாறாக இயற்கையில் பொதிந்துள்ள ஒழுங்கு, இலக்கு என்பவற்றை திசை திருப்பக் கூடாது. கடவுள் இப்பூமியை மனிதனிடம் ஒப்படைத்ததே அதை மென்மேலும் மனிதர்கள் வாழ வளம் பெறக் கூடிய சூழலை உருவாக் கவே. கடவுள் மனிதரை மன்னித்து விடுவார். ஆனால் இயற்கை மனிதரை மன்னிக்காது என்ற ஆபிரிக்கப் பழமொழியை மனதில் இருத்தி இயேசுவைப் போல் கடவுள்-மனிதன்-இயற்கை என்ற மூன்று உண்மைகளை ஒருங்கிணைத்து வாழ்வது ஒவ்வொருவரின் கடமையாகும்.

## துணைநின்ற நூல்கள்

21ஆம் நூற்றாண்டில் விவிலியம்- அ. அலோசியஸ் சேவியர், அ. பீட்டர் அபீர் பூந்த மல்லி, சென்னை.

Kunnumpuram,Kurien .ed "Jnanadeepa: Pune Journal of Relious Studies Volume9 No. 1, Jan 2006.

Lonsdale, David S.J. Sheldrake, Philp S.J "The way "vol.31 oct 1991.



# முகவரி இழந்து தவிக்கும் நிலங்கள்

அருட்சகோ. யே. ஜெறால்ட் அ.ம.தி

## முன்னுரை

இன்றைய அநீத, சமூக, அரசியல், கலாச்சார, பொருளாதாரச் சூழலில், பூமியும் அதன் முகமாம் இயற்கையும், முகவரி இழந்து தவிக்கும் பரிதாப நிலையே இன்று காணப்படுகின்றது. இன்று நிலம் அந்நியமாக்கப்படுகின்றது. சொந்த நிலங்களை இழந்து தவிக்கும் நிலை, இரசாயன உரங்கள் நிலத்தின் வளத்தைக் கெடுக்கும் நிலை என்கின்ற பற்பல வடிவங்களிலே நிலமானது பாலைவனமாகின்றது என்று சொல்லலாம். நிலம் ஓர் உயிரற்ற வெறும் பொரு ளல்ல. 'பூமித்தாய்' என்று தான் நிலத்தை அழைப்பார்கள். திருவிவிலியப் பார்வையிலும் கூட நிலம் ஒரு விவிலியச் சின்னமாக அமைகின்றது. இந்த நிலையிலும் உயிரினச் சூழல் நெருக்கடி தொடர்பாக அதிக விழிப்புணர்வை மக்கள் மத்தியில் இன்றைய நாட்களில் காணக் கூடியதாகவுள்ளது. இன்று மனிதனுடைய ஆணவமும், பேராசையும் என்றுமே இளமையுடன் இருக்க வேண்டிய நிலத்தினைச் சின்னாபின்னமாக்கி வருகின்றது. இயற்கையின் சீற்றங்கள், வறுமை, நோய்களின் புதுப்புது வடிவங்கள் என்பனவற்றின் ஆதிக்கம் தலைவிரித்தாடு கின்றது. 'முகவரி இழந்து தவிக்கும் நிலங்கள்' என்கின்ற இந்தக் கட்டுரையில் திருவிவிலியத் தில் இடம் பெற்றுள்ள சில வரலாற்று நிகழ்வுகளுடன், இலங்கைத் தீவினிலே, நிலத்திற்கு நிகழும் நிலைமைகளையும் சுருக்கமாகக் கூற விளைகின்றேன்.

## நாடோடிகளும் அடிமைகளுமான இஸ்ராயேலர்

இஸ்ராயேல் மக்கள் இனம் ஆரம்பகாலத்தில் நாடோடி இனக் குழுக்களாகவே வாழ்ந்தனர். நிலங்கள் அனைத்தும் பொதுவிலேயே இருந்தன. எல்லோருக்கும் எல்லாம் சொந்தம் என்ற நிலைப்பாடே இருந்தது. அதாவது யாருக்கும் எந்த நிலத்தின் மீதும் தனி உரிமை கிடையாது. குழுவில் ஒவ்வொருவருக்கும் சம உரிமையும், கடமையும் இருந்ததால், எந்தப் பிரிவினையும் இருக்கவில்லை. சமத்துவ சமுதாயம் தழைத்தோங்கி நின்றது என்று கூறலாம். நாளடைவில் இவ்வாறு நாடோடிகளாய் வாழ்ந்த இனக் குழுக்களிடையே பிளவுகள் ஏற்பட்டன. இந்த இஸ்ராயேல் இனமானது பாபிலோனியாவில் அடிமைகள் ஆக்கப்பட்டனர். அந்த அந்நியரின் நிலத்தினிலே தங்கள் வியர்வையையும், குருதியையும் சிந்தி உயிர் வாழ்ந்தனர். தங்கள் சொந்த மண்ணிலிருந்து அந்நியமாக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களை, பாபிலோனியர்கள் சீயோனைப்பற்றி மகிழ்ச்சிக் கீதங்களையும் பாடும்படி கேட்டனர். அந்த மகிழ்ச்சிக் கீதங்களைப்

பாட இஸ்ராயேல் மக்கள் மறுத்து விட்டனர். "ஆண்டவருக்கு உரித்தாக்கும் பாடலை அன்னிய நாட்டில் எங்ஙனம் பாடுவோம்?" (திருப்பாடல் 137:4). ஆண்டவரைத் தொழத் தங்களுக்குச் சொந்தமண் வேண்டும், உரிமை கொண்டாடும் மண்ணில் தான் முழு மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும், சுதந்திரமாக இறைவனை வழிபட முடியும் என்ற ஏக்கம் இருந்தது.

## நிலம் விடுதலையின் சின்னம்

இஸ்ராயேல் மக்களின் அழுகுரலையும், ஏக்கத்தையும், கேட்ட கடவுள் (விடுதலைப் பயணம் 3:8-10), மோசேயை அனுப்பிச் செங்கடலைக் கடக்கச் செய்து, பாலும் தேனும் பொழியும், செழுமையான கானான் தேசத்திற்கு அழைத்து வந்து நிலம் கொடுத்து ஆசீர்வதித்தார். இதை ஒரு நபருக்குக் கொடுக்காமல் ஒரு கூட்டுக் குழுவிற்குக் கொடுத்து மகிழ்வாக வாழ வழிவகுத்தார். (யோசுவா 18:1-10) வாழ்வு கொடுப்பதையே மையப்பொருளாகிக் கொண்ட திருவிவிலியத்தில் நிலம்கொடுத்து வாழ்வு கொடுப்பது என்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.இவ்வாறு நிலம் விடுதலையின் சின்னமாக அமைகின்றது.

## இறைவனே இந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்


நாம் வாழுகின்ற இந்தப் பூமியைப் படைத்தவர் இறைவன் (தொடக்கநூல் 1:1). ஆகவே இந்தப்பூமி, பூமியில் வாழும் உயிரினங்கள், பூமிக்கடியிலுள்ள கனிவளங்கள், அனைத்தும் இறைவனுக்குச் சொந்தமானவை. (தி.பா 24:1) "மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை, நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்!" அதாவது இறைவனே இப்பூமிக்குச் சொந்தக்காரர் என்கின்ற எண்ணம் இஸ்ராயேல் மக்கள் மனதிலே ஆழப்பதிந்த அடிப்படைச் செய்தியாகும். ஆண்டவருக்குச் சொந்தமான இந்த அற்புதமான பூமியை படைப்பின் மையமும், சிகரமுமான மானிட சமுதாயம் முழுவதிற்கும் இலவசக் கொடையாகக் கொடுத்தார். எனவே இந்தப் பூமி அனைவர்க்கும் சொந்தமானது. இதை வழிநடத்தும் பொறுப்பு அனைவரினதும் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்தக் கொடையை ஒரு சிலர் மட்டும் பயன்படுத்துவது, சுயநல ஆசைகளுக்கு விலை கொடுப்பது, இனிவர இருக்கின்ற சமுதாயம் பயன்படுத்தமுடியா நிலைக்கு ஆக்குவது போன்ற அந்தச் செயல்கள் யாவுமே கடவுளுடைய நோக்கத்திற்கு எதிரானவை.

## இயேசுவினுடைய இறையரசுச் செய்தி

இயேசுவினுடைய காலச் சமூக சமய அரசியல், பொருளாதார அமைப்பைப் பார்க்கும்போது, பணப்பலமும், அரசியல் செல்வாக்கும் படைத்த ஒரு சிறிய கூட்டம் பல ஏக்கர் நிலங்களுக்கு உரிமையுடையவர்களாக இருந்தனர். பெரும்பாலான ஏழைமக்கள் நிலம் ஏதுமற்ற வெறுங் கூலி விவசாயிகளாகவே இருந்தனர். இத்தகைய சமுதாயப் பின்னணியில் இயேசு மண்ணிலிருந்து அந்நியமாக்கப்பட்ட இந்த ஏழைமக்களோடு தன்னை ஒன்றுபடுத்திக் கடவுளில் உண்மையான யூபிலி ஆண்டை இந்த மண்ணிலே நிலைநிறுத்த வேண்டும்

என்பதனை மனதில் நிறுத்தி தீவிரமாகப் போதித்துச் செயற்பட்டு வந்தார். இந்த யூபிலி ஆண்டை நிலைநிறுத்துவது என்பது சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்களைச் சமத்துவ நிலைக்குக் கொண்டு வந்து, சமத்துவம், சகோதரத்துவம், நீதி போன்ற இறை மதிப்பீடுகளின் அடிப்படையில் மக்கள் அனைவரையும் வாழ வைப்பது என்பது இயேசுவினுடைய இறையரசுச் செய்தியாக அமைந்தது.

## இலங்கைத் தீவின் நிலங்களின் இன்றைய நிலை



எம்முடைய இந்த இலங்கைத் தீவினிலே தற்போது நிலவும் சூழலைச் சற்று ஆழமாக உற்று நோக்கிப் பார்ப்போமேயானால், சொந்த மண்ணை இழந்த நிலை, சொந்த மண்ணினிலே, அகதிகளாக்கப் பட்ட நிலை, சுயநலப் போக்குகளுக்காக நிலத்தை விலை பேசும் நிலை, சொந்த மண் இழந்து வெளிநாடுகளில் அகதிகளான நிலை என்கின்ற பட்டியல் நீண்டு செல்கின்றது. அடையாளங்களை அழித்துப் பலவீனப்படுத்துவதன் மூலம் அதின் இருப்பையே தகர்த்துவிட முடியுமெனக் கூறுவார் கள் இச்சிறிய இலங்கைத் தீவினிலே வாழும் எல்லா இனத்தவரும் தமக்கெனத் தனியான சில அடையாளங்களைக் கொண்டிருக்கின்றனர். மொழி, பூர்வீக நிலம், தனியான கலாச்சாரம், சுதந்திரமான மத அனுஸ்டானம் என்பன இவற்றுள் முக்கியமானவை. தொன்று தொட்டு வாழ்ந்து வந்த மக்களின் பூர்வீக நிலங்கள் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடியேற்றங்கள், அதுவும் போருக்குப் பின்னரான மீளக் குடியேற்றம் என்கின்ற போர்வையில் நிலத்தின் சொந்த முகவரி இழந்து, தன்முகவரி தேடும் நிலையே இன்று காணப்படுகின்றது. வெளிநாட்டவர்களுக்கு, உல்லாச விடுதிகளுக்காக எத்தனையோ சிறு தீவுகள், காசுக்கு விலை போகின்றது. சுய அரசியல் இலாபம் கருதி இடம் பெறும் செயல்களால் இந்த நிலங்களில் வாழுகின்ற மக்களின் நிலை என்னவாகும்?

### முடிவாக

மண்ணை இழந்து, மனிதத்தை இழந்து நிற்கும் மானிட சமுதாயத்தின் பக்கம் நம் பார்வை திரும்ப வேண்டும். நாங்கள் உழுது உழைக்கின்ற எம் சொந்த மண், எங்களை எதிர்க்கின்றது, சொந்த மண்ணிலே நாங்கள் அடிமைகள், அகதிகள், சிறைக்கைதிகள், எம் உறவுகளின் இரத்தம் தோய்த்த நிலங்களே இவைகள், என்கின்ற புலம்பல் மிகுந்த மக்கள் மத்தியிலே எம் எல்லோரினதும் பங்களிப்பு என்ன? அன்று இஸ்ராயேல் நாடோடி அடிமைகளுக்கு நிலம் வழங்கி ஆசீர்வதித்த இறைவன் முகவரி இழந்து தவிக்கும் எம் இலங்கைத் தீவின் நிலங்களுக்கு மீண்டும் முகவரி கொடுக்க வேண்டும்.



# மானிட சுயநலத்தால் சிதைகின்ற கடவுளன்பு

அருட் சகோ. அன்ரன் ஜஸ்ரின் அ.ம.தி

வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி ஊணாகி எனத் தாயுமானவர் இறைவனை இயற்கையில் கண்டு மகிழ்கின்றார். வானமும் பூமியும், அதில் வாழும் யாவும் இறைவனின் அன்பால், அன்பின் வெளிப்பாடாய், தன் உணர்வுகளின் உருவமாய் ஒவ்வொன்றாய் செதுக்கி எடுத்த உயிருள்ள ஓவியங்கள். மானிடப் பிறப்புக்கு நிகரான எந்தப் படைப்பையும் ஏற்படுத்தாமல் தன் உயிர் மூச்சை ஊதி வாழ்வு கொடுத்து வையத்தில் மனிதன் வாழ சித்தம் கொண்டார். அவ்வாறே செய்தருளினார். ஏதேன் தோட்டத்தில் மனிதனை இருத்தி "கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள் (தொ.நூ.1:28) என மொழிந்தார்.

இறை வல்லமையை அவரின் பராமரிப்பை எந்நாளும் எடுத்தியம்புகின்ற, புகழ்பாடுகின்ற கருவிகளாக, மாசுமறுவற்றதாய், தன்னையும் தன்னைச் சூழ்ந்திருப்பதையும், கருணைக் கண்களால் நோக்கி மானிட சமுதாயம் உருப்பெற்றது. தன்னைச் சுற்றியிருக்கும் இயற்கையை அவன் காலப்போக்கில் ஐந்து பெரும் பிரிவுகளாக பிரித்து, மலையும் மலைசார்ந்த பகுதியும், காடும் காடு சார்ந்த பகுதியும், வயலும் வயல் சார்ந்த பகுதியும், கடலும் கடல் சார்ந்த பகுதியும், மற்றும் மணலும் மணல் சார்ந்த பகுதியும் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பெயரிட்டு அவற்றை விருத்தி செய்து இயற்கையைத் தன் வாழ்வோடு இறை திட்டத்திற்கேற்ப பயன்படுத்தி வந்தான். இதைத்தான் சிலப்பதிகாரப் பாடல் ஒன்று இவ்வாறு சொல்கிறது. "முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உழற்ற பாலை என்பதோர் படிமம் கொள்ளும்" இது நிலங்களின் தன்மையை எடுத்தியம்புகின்றது.

மாற்றம் என்பது மாற்றமடையாத் தத்துவம் எல்லாமே மறையக் கூடியதுதான் என்ற கார்ல் மார்க்ஸ் தத்துவம் காலத்திற்கும் உண்மை என்பது போல கால மாற்றத்தின் காரணத்தாலும், நாகரிகப் பரம்பல், மானிட அறிவியல் வளர்ச்சியும் தோன்றி மலர்ந்து இயற்கை சிறிது சிறிதாக சிதைவடையத் தொடங்கியது. மன்னர்கள் தங்கள் மகுடங்களைக் காக்கும் பொருட்டு வேள்வி களும், போர்களும் நடத்தி ஆயிரம் ஆயிரம் உயிர்களை பலியாக்கி மண்ணோடு மண்ணாக் கினார்கள். மனிதனின் மடியாகிய மண்ணில் தவழ்ந்து மகிழ வேண்டியவன் அதன் ஆழத்தில் அடங்கிக் கிடப்பவனாகிவிட்டான். சுயநலத்தின் சுவடுகளில் பயணித்து தன் சுதந்திரத்தை,

மனித நேயத்தை, மாண்பை, இழந்து அறிவியலே வாழ்வென வாழ்கிறான். இறைவன் தந்த இலகுவான யாவராலும் கொடுக்கக்கூடியதான அன்பை மற்றவர்களோடு பகிர முடியாமல், தான் தோன்றிகளாய் வாழ்கிறார்கள்.

ஆன்மீகத்தில் அமைதி உண்டு, ஆக்கம் உண்டு. மன நிறைவு உண்டு. மண்ணுயிரை தன்னுயிர் போல் நேசிக்கும் மனப்பக்குவமும் உண்டு. ஆன்மீக நெறியை விட்டு, பொருள்ப் போகத்தில், இன்பத்தில், சுக வாழ்வில் திளைக்க நினைக்கும் மனம் தறிகெட்டு ஓடி தன்னையே அழித்துக்கொண்டு இயற்கையையும் சீர்குலைக்கிறது. படைப்பனைத்தையும் படைத்து நல்லதெனக் கண்டார் இறைவன். ஆனால் பாவத்தால் படைப்பு தன் மதிப்பை இழந்து நிற்கிறது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனை ஏன் தன் உடன் பிறந்தவனையே அன்பு செய்யத் தெரியாதவன், ஏற்றுக் கொள்ள முடியாதவன் இயற்கையின் இரகசியத்தை, அதன் ஆறுதலான வருடங்களாக எவ்வாறு புரிந்து கொள்வான்.

"அனைத்தையும் ஆளுங்கள்" என்றார் ஆளுங்கள் என்பது அடக்கி வைத்து ஆளுவது அல்ல, பேணிப்பாதுகாத்து விருத்தி செய்வதாகும். வெறுமையில் இருந்து உலகை உருவாக்கினார். அதை மீண்டும் வெறுமையாக்க நினைக்கிறான் மனிதன். சுயநலத்தின் பிடிக்குள் இறை வல்லமையை அடக்கி அதிகார வெறிக்குள் இறை இரக்கத்தை முடக்கி, தனது சக்தியையும், ஆளுமையையும் மேலாக நினைக்கின்ற சமுதாயமே இன்றைய கால சமுதாயம். கிறிஸ்தவ பாரம்பரியங்களும், நம்பிக்கைகளும் அற்ற மனிதனாக அனைத்திற்கும், அறிவியலால் விடைகாண முடியும் என துடிக்கின்ற இச்சமுதாயம் ஓர் நாள் உணரத்தான் போகிறது. தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டு, அனைத்தையும் ஒரு சொல்லால் உருவாக்கியவரின் ஆற்றலையும் மகிமையையும் உணராத இத்தலைமுறை, தன் முகவரிகளை இழந்து திருப்பாடல் ஆசிரியர் கதறி அழுவது போன்று அழத்தான் போகிறது. (தி.பா.119 வீணானவற்றை நான் பாராதபடி என் கண்களைத் திருப்பிவிடும் உம் வழிகளின் வாயிலாய் எனக்கு வாழ்வளித்தருளும்)


கடவுள் தன் உருவிலும் சாயலிலும் மானிடரைப் படைத்து, படைப்பாற்றல் உள்ளவனாய், கடவுளின் பண்புகளைப் பிரதிபலிப்பவனாய் மனித நேயம், மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாத்து வாழ வேண்டியகட்டுப்பாடுகளை அறிந்து தெரிந்து தன் வாழ்வின் புதுமைச் செயல்களை இறையன்பின் ஆற்றலோடு செய்து உயரிய சமுதாயமாகவே மலர வேண்டும். கடவுளன்பு சிதைக்கப்படாமல் வாழ்வு பெற உழைக்க வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்

1. The way; Review of Contemporary Spirituality
Volume 31, Number 4, October 1991

2. கோவி.பழநி; சுற்றுப்புறச் சூழலும் பாதுகாப்பும்

3. அருள் நம்பி மாசற்ற சுற்றுச் சூழலும், மனித மேம்பாடும்
சுவாதி பதிப்பகம் 1996



# புனித பிரான்சிஸ் அசிசியார்

அருட்சகோ. ம. அன்ரன் ஜெராட்

## புனிதரின் ஆரம்பங்கள்

1181ம் ஆண்டில் இத்தாலி நாட்டில் உள்ள அசிசி என்ற சிறிய நகரத்தில் பிரான்சிஸ் பிறந்தார். இவருடைய தந்தையார் பீட்டர் பெர்னர்டென் என்பவர் புடவைகள் வியாபாரம் செய்யும் தொழில் நடத்தி, வாள் தாங்கிய படைவீரனாக மகன் பிரான்சிஸை உருவாக்கும் எதிர்கால கனவுடன் வாழ்ந்தவர். தாயார் பிக்கா என்பவர் தன் மகன் கையில் வாள் ஏந்துவதை விட இசைக்கருவி தாங்கி அதனூடாக இறைவனைப் புகழ்ந்து "ஒரு நாள் என் மகன் கடவுனிள் மகனாக இருப்பான் " என்ற பெருமையில் வாழ்ந்தவர்.

தந்தையார் வியாபாரத்தினால் சேகரித்த பணங்களையெல்லாம் தன் நண்பர்களுடன் இணைந்து கேளிக்கையில் செலவழிக்கின்ற ஒரு பழக்கம் அவரிடம் இருந்து வந்தாலும் கூடுதலாக ஏழைகளுக்க உதவி செய்யும் பண்பு மேலோங்கி நின்றது. பிரான்சில் வளர்ந்து இளைஞனாக வந்தபோது தன் நண்பர்களோடு இணைந்து விளையாட்டு நிகழ்வுகளிலும், கேளிக்கைகளிலும், நகைச்சுவைகளிலும் திழைத்து ஊர்கள் தோறும் சுற்றித்திரிந்தார். எல்லாவற்றையும் விட இயற்கையில் அதீத இன்பத்தைக் கண்டவர். தனது அசிசி நகரத்தை பாதுகாக்கும் பொருட்டு தன்னை படைவீரனாக இணைத்துக்கொண்டு பின்னர் பல இளைஞர்களோடு இவரும் சிறைக்கைதியாக்கப்பட்டார். அங்கும் மனந்தளரவிடாமல் இளைஞர்களுக்கு வாழ்வின் நம்பிக்கையை அளித்து வந்தார்.

பின்னர் தனது பெற்றோரின் நிலைகண்டு தனது தந்தையாருடைய தொழிலில் தன்னையும் இணைத்துக்கொண்டார். ஒருமுறை உரோமாபுரியில் அமைந்த புனித இராயப்பரின் கல்லறைக்கு யாத்திரை சென்ற கூட்டத்தோடு தன்னையும் இணைத்துக்கொண்டார். அங்கே ஓர் இடத்தில் அவர் என்றுமே காணாத அளவில் பிச்சைக்காரர்கள் பிச்சைப்பாத்திரங்களுடன் நின்றதை கண்டார். அன்றிலிருந்து ஏழைகளுக்கு உதவிசெய்யும் நோக்கத்துடன் தினமும் ஊர்கள் தோறும் நடந்து ஏழைகள், வறியவர்கள்,ஊனமுற்றவர்கள் போன்றோர்க்கு உதவுவதில் இன்பத்தைக் கண்டார்.

செல்வமே உலகம், நாடுகளை கைப்பற்றுவதே பெருமை என்ற அடிமைத்தழைகள்

அன்றைய சமுதாயத்தில் நலிந்து கிடந்தபோது செல்வாக்கான குடும்பத்தில் தோன்றிய இளைஞன் பிரான்சிஸ் தந்தை ஈட்டிய செல்வத்தையெல்லாம் "அப்பா நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் " என்று கூறி தன் பெறுமதியான ஆடைகளை கழற்றி தந்தையின் பாதத்தில் வைத்துவிட்டு சாக்கு உடை அணிந்து கொண்டு இயற்கையில் இறைவனைக் கண்டு அன்பிற்காய் ஏங்கிய இறைவனின் படைப்புக்களிற்கு சகோதரனாய் மாறினார்.

## இயற்கையில் புனிதரின் உறவு


படைத்த படைப்புக்களில் படைத்தவரைத் தினமும் காணத்துடித்தார். படைப்புக்களாலே படைத்தவனை மகிமைப்படுத்தவேண்டும் என்று உறுதியாய் நின்றார். படைப்புக்கள் ஏதும் அன்பின்றி தவிக்க கூடாது என்று அவற்றோடு கலந்தார். இவ்வாறு பறவைகளில் விலங்குகளில் இறைவனைக் கண்டார். கதிரவனோடும் நிலாவுடனும் உறவுகொண்டு வாழ்ந்தார். சகோதரன் சூரியன், சகோதரி சந்திரன் (Brother Sun &Sister Moon) என்ற நிலைக்குள் தன்னை நிலைநிறுத்தினார். இயற்கையோடு ஒன்றித்தும் அவைகளின் பெயரால் இறைவனைப் பாடுவதிலே இறை இன்பத்தைக் கண்டார்.

வயல்க்கரை ஓரங்களில், வீதிகளில் பறவைகளை காணும் போதெல்லாம் அவைகளை நோக்கி ஆர்வமாய் செல்வார்.அவையும் பிரான்சிசை எதிர்பார்த்து அவரது இறைவார்த்தைக்கு செவிமடுக்கும். "என் சகோதரர்களே பறவைகளே உங்களை அன்பு செய்யும் கடவுளை நீங்கள் புகழவேண்டும் " என்று போதிப்பார். பின்னர் அவற்றிற்கு இறை ஆசீர் வழங்கி பறந்து செல்லும்படி அனுமதி கொடுத்தவுடன் அவை வேறு இடத்திற்கு பறந்து செல்லும். பிரான்சிசை கண்டவுடன் பறவைகள் தலையிலும் கைகளிலும் வந்து அமர்ந்து கொள்ளும் மிருகங்களும் இவர் காலடிகளில் வந்து அமர்ந்து கொள்ளும்.

இவ்வாறு எல்லா உயிர்களிடத்திலும் அன்பாயிருந்தார். அவை ஆண்பாலாக இருந்தால் சகோதரன் என்றும் பெண்பாலாக இருந்தால் சகோதரி என்றும் உறவாடுவார்.

## புனிதர் தந்தவை

புனித பிரான்சிஸ் அவர்கள் துறவு வாழ்வை ஆரம்பித்த 10 ஆண்டுகளில் பல ஆயிரம் இளைஞர்கள் இவரைத் தங்கள் தலைவராக ஏற்று இவரது சபையின் உறுப்பினர்களாயினர். புனித கிளாரம்மாளும் இவர் காட்டிய வழியை பின்பற்றி ஒரு சபையை நிறுவினார். இவர் பொதுநிலையினருக்கென உருவாகக்கிய 3ம் சபையிலும் இன்று பல இலட்சம் மக்கள் செபம், தபம் முதலியவற்றில் தம்மை ஈடுபடுத்தி புனிதர்களாக வாழ்கின்றனர்.
புனித பிரான்சிஸ் அவர்கள் ஒருமுறை வழியில் கண்ட தொழுநோயாளியை கட்டி



அரவணைத்து முத்தமிட்டதன் மூலம் தான் தனது பழைய பாவ வாழ்வில் இருந்து விடுபட்டார் என்பதை அடையாளம் மூலம் வெளிப்படுத்தினார். இவர் இறக்கும் போது இவருக்கு வயது 44. அரைவாசி பார்வையை இழந்த நிலையில் கடுமையான நோயினால் தாக்கப்பட்டார். இவர் இறப்பதற்கு 2 ஆண்டுகளிற்கு முன்னர் ஆண்டவர் இவருக்கு 5 காயங்களை பதித்தார். அந்த காயங்களினால் தாங்கமுடியாத வேதனையை அனுபவித்தார். ஆனால் "ஆண்டவரே நீர் அனுப்பும் சாவு எனும் சகோதரிக்காக உம்மைப் போற்றுகின்றேன்." என்று மன்றாடினார். அவர் இறக்கும் நேரத்தில் தனது மடாதிபதியிடம் தனது உடைகளைக் கழைந்து கிறிஸ்துவைப்போல் அடக்கம் செய்யும்படி கேட்டுக் கொண்டு திருப்பாடல் 141 ஐ பாடியபடி உயிர்துறந்தார். இவருக்கு எதிர்வு கூறப்பட்டபடி 1226.Oct.4 அன்று திருத்தந்தை 9ம் கிறகொரி அவர்களால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

# SYNOPSIS

## Creation is a gift of God to Humans

This article is a reflection on creation in the light of the Old Testament. It identifies the survival energy in creation, as it reveals the creative love and the transforming power of God the Creator who is imminent in creation. While the creation story and the Wisdom literatures speak of this, Book of Job in the last chapters speaks of eco-centered creation and prompts humans' responsible stewardship in managing and looking after God's creation, without claiming ownership of it. The Prophets on their part focused on human's relationship to the land which belongs to God and demanded righteousness and justice in dealing with it.

The article is concluded with the call to practice environmental discipline, which for the Christians is not an option but a moral imperative. Respecting creation and living the role of a steward, not only pave the way for the present generation of people to experience life in abundance and also give assurance of such life to the future generation. Because the will of the Creator is the well being is that all creation flourishes.

*Rev. Fr.Gerard de Rosairo omi,*

# Nature in the preaching of Jesus

Human beings have rights over the nature. In the Old Testament God spoke to the Israelites through nature, especially he made himself present in the mountain places,like Sinai. Mountains are considered as sacred places where the almighty dwells. In the gospel Jesus is seen as the one who has the intimate relationship with nature. In his preaching he gives much priority to nature. As the ten Commandments were given to the Israelites through Moses on the Mountain, eight beatitudes are given by Jesus on The Mountain. So in Jesus' preaching natural places play an important role. In proclaiming the kingdom of God he and it's values he mentions the birds, animals and flowers in a symbolic way. So that people will grasp the message very quickly. To maintain communian with his father, Jesus chooses very silent and lonely places.So, we also try to make a good relationship with God by loving nature.

*Mr. A.S. Arokiyanathar*

# To Come to know God in the Nature

One of the most fundamental issues is that 'Does God exist?'. Theism accepts the existence and atheism in its various forms rejects it. The truth of God is unique. Man can know through the light of natural reason. Man by nature and vocation is a religious being. Created to live in comunion with God, Man can arrive at the knowledge of His existence through the light of reason and by the light of faith. "God, the origin and end of all things,can be known and demonstrated with certainty by the natural light of reason starting from the created world, that is from the visible work of creation,as a cause is known through its effects" c.c.c 31-35. There are many theories employed to prove it; among them the famous five ways of St. Thomas

Aquinas is a popular one. In employing the philosophical arguments and creation one can come to know the God who exists.Theistic arguments and scriptural proofs help us to demonstrate with certainty the existence of God.

*Rev. Fr. Patrick Leo OMI*

## Balance of Nature and Divinity

The earth and its state of existence in its environment together are called nature. In view of this state of existence the nature is in balance in itself. This balance of nature is being established through its continuity and activation of power in its own sources of Mega speed, extreme heat rays and very active chemical reactions in its own components .That is a sort of unity in diversity. Knowing this state of affairs our ancestors even now many of us too are worshiping nature as divine super power, that is God.But the theologians said this balance of nature in an example to reveal the Majesty of God. Instead, seeing the nature in the image of God is also the same as accepting the Majesty of God.

*Mr. R. Thilaharatnam*

## The Need to Protect the Nature.

There is a growing awareness among people all over the world today that we are facing an ecological crisis. Nature, in its original,un-tampered state,was perhaps the most impressive and imposing masterpiece of the creator. Not only was it noted for its amazing immensity, awe -inspiring majesty, captivating beauty and breath- taking variety, it was also remarkable as a

self- sustaining, self - maintaining, self repairing, balanced and harmonious system.

New insights and new interpretations that emerge in the present times in different religious traditions and sources emphasize greatly the significance of the interdependence of creatures in the world and perceive the world as a single cosmic community and the world as a gift from God and a possession of God. Although human beings are placed at the apex of creation, they are integral to creation and have the responsibility to take care of creation. This underlines a perspective that will respect the earth and her resources. Humans are created to be stewards and caretakers of God's creation and to share in the creative and sustaining power of God, the creator.

*Rev. Bro. A. Skaran Raj*

## Lands without address

If we turn the pages of the scriptures there are ample incidents about lands. People of Israel were given a land by God. "I have come down to deliver them from Egyptians and to bring them up out of that Land to a good and broad land, a land flowing with milk and honey (Ex3:8).

While the people of Israel were in the land of Babylon as slaves, they were asked to sing one of the songs of Zion. They said how Could we sing the Lord's song in a foreign land (ps137:4). People of Israel said that to worship their God, they want their own land and in a free land only they will be able to worship God in freedom.

During the time of Jesus, the major portion of the lands were with the rich people. People who do not have a land were very poor people. Many people were alienated from the land. In this condition the Gospel message of Jesus was love and justice.

In Sri Lanka people are alienated from their own lands for various reasons; small islands are sold to foreigners. In the name of development the natural lands are getting polluted. People who were living in their own lands are cast away. This land of ours is really a blood shed land. Our lands are searching for their address.

*Rev. Bro. Jerlad OMI*

# Selfishness of Man thwarts the love of God

As image of God a person is endowed with an especial dignity. The notion of Merciful Stewardship is at the centre of our responsibility as image of god. As viceregents of God within creation, we have both a vocation and a task to love, care for and develop the portion of creation we can affect. For the first time in the history of the world human beings possess the tragic power to blight our whole earth. We begin to see that there are things technically feasible but utterly destructive of all life within a matter of generation.

Man must stand in need of a new and better logic. We are in a small earth, resourcess are limited. Man with his selfish motivation, destroys the creation.

*Rev. Bro. V. Anton Justin OMI*

# St.Francis of Assisi

Francis was born in the little city of Assisi in Italy.Peter Bernardone who was Francis's father was greatly pleased with his son. Lady Pica Francis's gentle mother wanted her son to be a son of God one day.

As Francis grew into a young man he wasted his father's money in spending with the funny games around the city with his friends. But above all these worldly satisfaction he was so kind with the poor, lowly and the beggers. He was highly taken up by the creation of god.

There was a large city that wanted to bring little Assisi and neighboring towns under its power. When the nobles of Assisi called for volunteers to help, defend their countryside, Francis and his company joined in the battle. In the war they were all caught up and kept in a prison where Francis made others to be happy with the hope of a future by his songs and jokes. Then he helped his father in his business. After seeing the poor and the beggars in his surroundings heremoved his wealthy clothes and put on sack cloth to be a friend of those who were in need.

In every work of the artist he promised the artist, whatever he found in the things made he referred to the maker. He rejoiced in all the works of the hands of the Lord. In beautiful things he saw beauty itself, all things were to him good. Above all he rejoiced in creatures specially birds and animals. He used to preache to them and bless them when he happens to meet them along the roads and the paddy fields. When the birds see him they used to rest on his head and the hands as well as animal rest under his feet.

He used to call the female creatures as sisters and the male creatures as brothers. He had a close relationship not only with the living creatures but also with other objects e.g. Brother Sun and sister moon. Francis praised God on behalf of every creature what God has created.

Francis founded a religious order. After establishing the congregation he could collect thousands of youth to work in the vineyard of the Lord. He established a 3rd order of Franciscan for the laity also.

When Francis was at the age of 44, he was half-blind and seriously ill. Two years before his death, he received the stigmata, the real and painful wounds of Christ in his hands, feet and side.

On his death bed he said over and over "Be praised, O Lord for Sister Death". He sang the 141 psalm also. At the end he asked his superior to have his clothes removed when the last hour comes, in imitation of his Lord. As he foretold, he was canonized by Pope Gregory in 1226 oct.4.

*Rev. Bro.M. Anton Jerad*

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 180/=

வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16

Euro 14

தனிப்பிரதி 55/=

தொடர்பு கொள்க:

**இறையியல் கோலங்கள்**

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly

Annual Subscription: Local (Incl. postage) Rs. 180/=

Foreign (Incl. postage) U.S.$ 16

Euro 14

Single Copy Rs. 55/=

Correspondence to:

**Irai Iyal Kolangal**

St.Francis Xavier's Seminary

Columbuthurai, Jaffna,

Sri Lanka.

Tel: 021 222 2482, 021 222 7145

Registered No. QD/137/News/2011

Design & Print Judeson